# மள்ளர் மலர்

ஆசிரியர் : பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தர் ❁ மலர் 12 ❁ இதழ் 3 ❁ மார்ச் 2006


## மள்ளர் குலத்துக் குடும்பமார்கள், ஆசாரிமார்கள்

## பட்சிருபா சேர்வை ராவுத்தருக்குக் கொடுத்த

# போடி மீனாட்சிபுரம் செப்பேடு பட்டயம்

செய்திகள் உள்ளே . . .


## மார்ச் 2006 – மள்ளர் மலர் – பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| ➲ நூல் வரவு – தமிழறிஞர் கோவை ஞானி பற்றிய கட்டுரைகள் | 2 |
| ➲ புது நூல் – மருத மள்ளர் வாழ்வியல் - *முனைவர் பெ. மாதையன்* | 2 |
| ➲ போடி மீனாட்சிபுரம் செப்பேடு | 3 |
| ➲ கவிதை நூல் – திணை நிலங்களின் மணம் - *முத்தமிழ் விரும்பி* | 4 |
| ➲ மானமும் அறிவும் மள்ளர்க்கு அழகு - *புலவர் கி.ஆ. குப்புராசு* | 5 |
| ➲ அன்புள்ள ஆசிரியருக்கு | 8 |
| ➲ புது சமூகவியல் நூல் – மீனவர் வரலாறு மீட்டுருவாக்கம் - *முனைவர் அரு. பரமசிவம்* | 10 |
| ➲ கட்டுரை விமர்சனம் – இருங்கோவேளின் தோற்றமும் வழித்தோன்றல்களும் | 11 |
| ➲ தோகைமலை வட்டெழுத்தில் கல்வெட்டு - *திரு. நடன காசிநாதன்* | 12 |
| ➲ தொல்லியல் துறையின் மழுப்பல் பதில் | 14 |
| ➲ உடுமலை வட்டம் பள்ளபாளையம் கிராமம் தேவேந்திர மக்களின் குல தெய்வ வழிபாட்டு மரபுகள் - *ச. கலைச்செல்வன்* | 15 |
| ➲ இலக்கியத் தொடர் – செங்கோட்டுப் பள்ளு | 18 |
| ➲ புது ஆய்வு நூல் – மருதநிலத்து மள்ளர் இசை - *டாக்டர் கு. மாரியப்பன்* | 23 |


நூல் வரவு

## தமிழறிஞர் கோவை ஞானி பற்றிய கட்டுரைகள்

| | | |
|---|---|---|
| நூல் | : | ஞானியின் எழுத்துலகம் |
| பதிப்பாசிரியர் | : | முனைவர் தே. ஞானசேகரன்<br>பொறிஞர் முத்தமிழ் விரும்பி |
| அளவு | : | டெமி, 199பக்கங்கள், |
| விலை | : | ரூ.90/-<br>டிசம்பர் 2005 |
| வெளியீடு | : | தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு நிறுவனம்<br>அறிவகம், ஆசிரியர் குடியிருப்பு,<br>பாரதியார் பல்கலைக்கழகம்,<br>கோயம்புத்தூர் - 641 046. |





கோவை ஞானி அவர்களின் பன்முகத் திறமைகளைப் பற்றிய பல அறிஞர்களும் எழுதிய இருபது கட்டுரைகள் அடங்கிய நூல். ❁ ❁ ❁

புது நூல்

## மருத மள்ளர் வாழ்வியல்

| | | |
|---|---|---|
| நூல் | : | சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம் |
| ஆசிரியர் | : | முனைவர் பெ. மாதையன் |
| அளவு | : | டெமி, 120 பக்கங்கள், விலை ரூ.40 |
| வெளியீடு | : | நவம்பர் 2005,<br>நியூ சென்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,<br>41 - பி,சிட்கோ இன்டஸ்டிரியல் எஸ்டேட்,<br>அம்பத்தூர், சென்னை - 600 096. |




கோயம்புத்தூர், தமிழர் பண்பாடு சமூக ஆய்வு மன்றத்தில் ஈரோடு மாவட்டம் காசியூர் தெய்வத்திரு கருப்பப் பண்ணாடி - ரெங்கம்மாள் மள்ளத்தியார் நினைவு அறக்கட்டளை சார்பாக சங்க இலக்கியத்தில் செந்நெல் முதுகுடியினர் எனும் தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவின் விரிவாக்கம். ❁ ❁ ❁

# மள்ளர் மலர்

மலர் 12 இதழ் 3

மீனம், திருவள்ளுவர் ஆண்டு 2037

பார்த்திப- பங்குனி, மார்ச் 2006

**தமிழ் எங்கள் உயிருக்கு நேர்**

ஆண்டுக் கட்டணம் : ரூ. 120/-

வாழ்நாள் கட்டணம் : ரூ. 1,500/-

தனி இதழ் : ரூ. 10/-

**அலுவலக முகவரி**

10/2 நால்வர் நகர், பாரதியார் பல்கலைக் கழகம் (அஞ்சல்)

கோயமுத்தூர் - 641 046

தொலைபேசி : 0422-2422287

தொலைநகல் : 0422-2425300

மின்அஞ்சல்: mallarmalar@yahoo.com

இணைய தளம்:
http://www.geocities.com/mallarmalar

**ஆசிரியர்**

முனைவர் குருசாமி சித்தர்
B.E., M.Sc.(Engg), Ph.D. (UConn-USA)

**துணை ஆசிரியர்கள்**

குரு. சித். செந்தில்குமார்
B.E., M.S., (TTU - USA)

மா. ராஜ்குமார் தேவேந்திரர் B.B.M.

மா. சிவக்குமார் தேவேந்திரர் B.E.

தேவேந்திர குல வேளாளர் சங்கத்திற்காக மாமன்னர் அச்சகம், கோவை-46 -இல் திருமதி துளசிமணி மாரியப்பன் அவர்களால் அச்சிடப்பட்டது. வெளியிடுபவர் டாக்டர் குருசாமி சித்தர்




# போடி மீனாட்சிபுரம் செப்பேடு மள்ளர் குல குடும்பமார்களும் ஆசாரிமார்களும் எழுதிக் கொடுத்த முத்திரைப் பட்டா

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை தமது 157 - வது வெளியீடாக 2005 இல் வெளியிட்ட தமிழகச் செப்பேடுகள் தொகுதி - 1 இல் 38 - ஆவது எண்ணாக இச்செப்பேடு பதிப்பிக்கப்பட்டுள்ளது. தேனி மாவட்டம் போடி அருகில் உள்ள மீனாட்சிபுரத்தைச் சேர்ந்த திரு.எஸ்.அப்துல் ரஹீமிடம் இச்செப்பேடு உள்ளது. இதைப் படியெடுத்துப் படித்தவர் தெய்வத்திரு முனைவர் இரா.ப. கருணானந்தன், கல்வெட்டாய்வாளர் ஆவார்.

கோம்பையில் வாழும் இடங்கையைச் சேர்ந்த அஞ்சுசாதி ஆசாரிமார்கள் மற்றும் குடும்பமார்களின் பெண்களை வலங்கையார் சிறைபிடிக்க முனைந்தபோது பக்கிரிவா சேர்வை ராவுத்தர் என்பவர் அவர்களைத் தடுத்துப் பெண்களின் மானத்தைக் காப்பாற்றினார். அதற்கு நன்றிக்கடனாக அவருக்கு மானங்காத்த தகப்பன் என்ற சிறப்புக் கொடுத்து சுருளி ஆற்றுப் பகுதிக்குட்பட்ட பகுதிகளில் வாழும் இவர்கள் அனைவரும் தங்கள் கல்யாணம் ஒன்றுக்கு 3 பணம் வீதமும் நவதான்யங்களும் கொடுக்க இச்செப்புப் பட்டயம் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது.

இதன் காலம் கி.பி. 1873 எனக் கணித்துள்ளனர். இச்செப்புப் பட்டயத்தின் சமூக முக்கியத்துவம் என்னவெனில் இதில் குடும்பமார்கள் மள்ளர் குலத்தவர் எனக் குறிக்கப்பட்டுள்ளது. குடும்பன், குடும்பமார், குடும்பன்மார் என்கிற சாதிப் பெயர்கள் உள்ளன. பள்ளர் என்ற சொல் இல்லை. மள்ளர் குலத்தவராகிய குடும்பமார்கள் மீது பள்ளர் என்ற பெயர் சுமத்தப்பட்டதை இவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது தெரிகிறது. தமது முந்தைய குலப் பெயர்களைப் பயன்படுத்துவதையே இவர்கள் விரும்பினார்கள் என்பது தெரிகிறது.

மானூர் மள்ளர் - ஆசாரிமார் செப்புப் பட்டயத்தில் மள்ளர்களும் ஆசாரிமார்களும் இணைந்து சுப்பிரமணிய சாமி திருக்கோயில் சாட்டி ஒற்றுமையாக வாழ்ந்திருப்பதைப் போன்று, சிக்கல் காலங்களிலும் இவர்கள் இணைந்து செயல்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த போடி மீனாட்சிபுரம் செப்புப் பட்டயம் காட்டும். போடி மீனாட்சிபுரம் என்பது மள்ளர் குலத்தவர் பலர் முஸ்லீம் களாக மாறி சிறப்புடன் வாழ்ந்து வரும் ஊராகும்.

## போடி மீனாட்சிபுரம் செப்பேடு

**செப்பேடு வாசகம்**

**வரி 1 - 10 :** காமாட்சி துணை ஸ்ரீராம ஜெயம் உலகநாதன் துணை ஈஸ்பரி காமாட்சியம்மன் கிருபா கடாகடா க்ஷத்தினாலே அருள் தங்கிய இடங்கை கூ சு (96 சாதி)த் தலைவனாகிய ஸ்ரீமது நவநீதகிருஷ்ண மேஸ்திரி யாசாரியாருத்தாரப் படிக்கு அஞ்சு சாதி தலைவமார்களும் **குடும்பமார்களும்** நாங்களனைவோரும் காமாட்சியம்மன் கிருபாலேயும் செல்லாண்டியம்மன் கிருபா கடாக்ஷத்தினாலேயும் தீன்குல வம்ச கோம்பையிலிருக்கும் பெண் மானங்காத்த தகப்பனாகிய பக்கிரிவா சேர்வை ராவுத்தருக்கு நாங்களனைவோரும் . . . எழுதிக் கொடுத்த பட்டா . .

**வரி 10 - 22 :** ஸ்ரீமுக ஹூ (ஆண்டு) வைகாசி மீ (திங்கள்) உயக (21) தீ (நாள்) அஞ்சு ஜாதி தலைவராயி ஸ்ரீ நவனீத கிருஷ்ண மேஸ்திரியாருத்தாபடிக்கி கோம்பையூரிலிருக்கும் காமாட்சியம்மனருள் தங்கிய விசுவகுல மேஸ்திரியாசாரியார் வெள்ளி வாடனாசாரியும் கோட்டையனாசாரியும் திரு பழழி ஆசாரியும் ஓவளியாசாரியும் கஸ்தூரியாசாரியும் மொண்டிக் கோட்டயநாசாரியும் **மள்ளர் குல** குடும்பத் தலைவனாகிய வயிரக் குடும்பனும் முத்துக் குடும்பனும் வெண்சாமரைக் கொத்திக் குடும்பனும் மூக்கன் காலாடி செல்லாண்டிக் குடும்பனும் பிடாரக் குடும்பனும் முத்துக் குமாரக் குடும்பனும் சாத்தா குடும்பனும் கோட்டை குதிச்சான் பழனியாண்டிக் குடும்பனும் வெடிக்காரர் செல்லாண்டிக் குடும்பனும் நாங்கள் ஜாதிக் குடும்பன் மாரனைவோர்களும்

**வரி 22 - 33 :** ஜெயவீரனாகிய நம்மள் தகப்பமாறாகிய ஆசாரிமார்களனைவோர்களும் காமாட்சியம்மன் செல்லாண்டியம்மன் யிவர்களுடைய கிருபா கடாக்ஷத்தினாலே நம்மள் பெண் மானங்காத்த தகப்பனாகிய பக்கிருவா சேர்வை றாவுத்தருக்கு அஞ்சு ஜாதி யிடங்கை ஜாதி தலைவர்களும் குடும்பன்மார்களும் கூடி ஒப்புக் கொண்டு வலங்கையார் குமுசல் கூடிப் பெண் சிறை பிடிக்க வந்ததில் அப்போது எங்கள் மானங்காத்த தகப்பனாகிய பக்கிருவார் சேர்வை றாவுத்தராகியவரு அதைக் கண்டு பெண்களையும் மானங்காத்து தங்களிடமாக யாதொரு நிந்தனைகளில்லாமல் மானங்காத்திருந்தபடியினாலே நாங்களஞ்சு ஜாதி தலைவோரும் குடும்பன்மார்களும் யெங்களுக்கு மானங்காத்த தகப்பநென்று

**வரி 33 - 41 :** ஸ்ரீமாத் நவனீத கிறுஷ்ண மேத்திரியாருத்தறப் படிக்கு அஞ்சு சாதி தலைவனும் குடும்பன்மார்களும் சந்தோஷித்து மாநங்காத்த தகப்பன் பகீறுவா சேறுவை றாவுத்தறுக்கு சுரிளி நதிக்குள்ளிட்ட அஞ்சுசாதி தலைவனாரிமார்களும் குடும்பன்மாரனவோர்களும் கெச்சலூத்து கெச்சள்ளை கணவாய்க்கு மேலிட்ட அஞ்சு ஜாதி தலைவரும் ஆசாரிமார்களும் குடும்பன்மார் நாங்களனைவோறும் ஒப்புக்கொண்டு எலிதிக் கொடுத்த முத்திரிப் பட்டயென்னவென்றால்

**வரி 41 - 53 :** யெங்கள் தகப்பனாகிய பக்கிறுவா சேர்வை றாவுத்தனுக்கு அஞ்சு ஜாதித் தலைவ ஆசாரிமார்களும் குடும்பன்மாரனைவோர்களும் ஸ்ரீமது நவனீத கிருஷ்ண மேஸ்திரி யாசாரியாரவர்கள் உத்தரப்படிக்கு கல்யாணத்துக்கு மூன்று பணமும் தவச தாணியம் அரிசி அஞ்சு படியும் முதல் வெத்திலை பாக்கும், கட்டின வீட்டுக்கு ஒரு பணமும் திவசம் குரிணியும் வருஷாந்தரமும் சத்தியந் தவறாமல் காமாட்சியம்மன் செல்லாண்டியம்மன் கிருபா கடாக்ஷத்தினாலேயும் நம்மள் மானங்காத்த தகப்பனுக்கு கல்லுங் காவேரி புல்லும் பூமி உள்ளவரைக்கும் . . . சந்திர சூரியாளுள்ள வரைக்கும். . .குடுத்து வருவோமாகவும். . .

**வரி 53 - 59 :** இதர்கு பஞ்சபாதகம் செய்தால் அஞ்சு ஜாதி தலைவ ஆசாரிமார்களும் குடும்பமார் சாதி அனைவோர்களும் கெங்கைக் கரையிலே . . . காறாம் பசுவைக் கொன்ற பாவத்தில் போவீர்களாகஉம். யிதற்கு சத்தியம் தவரி வின்ன பேதமாகப் பட்டாஉக்கு சாபத்துறோகம் செய்தவன் மனையில் யெருக்கிலையும் குருக்கும் யேசலிப்புத்தும் முளைத்துப் போவீறாகவும். .

**வரி 60 - 65 :** யிப்படிக்கு துறோகம் செய்யாமல் நிர்ணயமாகவும் மானங்காத்த தகப்பனுக்கு வருஷாந்திரம் கொடுத்து வருவீர்களாகவும், காமாட்சியம்மன் கிருபா கடாக்ஷத்தினாலேயும் செல்லாண்டியம்மன் கிருபா கடாக்ஷத்தினாலேயும் புத்திர சம்பத்தும் பசுவும் பாக்கியமும் பெருகு வாழ்ந்திருப்பீர்களாகவும்.


**வரி 65 - :** ஸ்ரீமது நவனீத கிருஷ்ண மேஸ்திரியாசாரியாரும் கொடித்தலை ஆசாரியாருத்தாரப் படிக்கு எழுதிக் கொடுத்த முத்திரப் பட்டா. காமாட்சியம்மனும் செல்லாண்டியம்மனும் துணை செய்யும். ஸ்ரீசங்கரபாணி காமாட்சி ஜெய விரியாலாக்காறன் அஞ்சு ஜாதி மேஷ்திரியாரவர்கள் றாமன் விசயறாம பாசிம் பென்ரு அவி மானங்காத்த அஞ்சு சாதியாருக்கும் குடும்பன்மாற்க்கும் யூசு பணியிலும் திறுச்சடையினில் தொட்டு சத்தியம் செய்து யெளுதிக் கொடுத்த பட்டா. யிதை யெவ்யெவரேன் தூஷத்து சத்தியம் தவரினால் புத்திர சன்தானமில்லாமல் போவீறாகக் கடவீர். ஜெயம் ஜெயம் யென்ரு பட்டா ஒப்புக் கொள்ளவும். ஈஸ்பரி காமட்சி ஜெயம் பட்டா.

❊ ❊ ❊

*கவிதை நூல்*

## திணை நிலங்களின் மணம்

**நூல்** : **வறட்சியின் பாடல்கள்**
**ஆசிரியர்** : **முத்தமிழ் விரும்பி**
**அளவு** : கிரவுன், பக்கங்கள் 119, விலை ரூ.45
**வெளியீடு** : டிசம்பர் 2005,
கடற்குதிரை, ஏ4, முதல் தளம்,
நேதாஜி நகர், பூளைமேடு,
கோயம்புத்தூர் - 641 004.
தொலைபேசி : 0422 - 5561553



**ஆசிரியரின் சமர்ப்பண கவிதையின் ஒரு பகுதி**

பொன்னேர் பூட்டும் நன்னாளில்
ஊர் கூடியிருக்கப்
பிஞ்சு விரல்களுக்கு
மேழி பிடித்துப் பழக்கிய தாத்தா
தஞ்சை வீரமரசன்பேட்டை
கரு அழகேசனார் அவர்கட்கு.

❊ ❊ ❊

## கரூர் மாவட்ட தேவேந்திரர் அறிக்கை தெலுங்கர் விஜயகாந்தின் சாதிய ஒடுக்குமுறை

இராமநாதபுரம் மாவட்டச் சுற்றுப்பயணத்தின் போது பல்வேறு சமூகத் தலைவர்களின் நினைவிடங்களுக்குச் சென்று மரியாதை செய்த தேசிய முற்போக்கு திராவிட கழகத் தலைவர் விஜயகாந்த் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தில் உள்ள தேவேந்திரர்கள் கேட்டும் இம்மானுவேல் தேவேந்திரர் நினைவிடத்திற்குச் செல்ல மறுத்து முன்பு தமிழ்நாடு வந்த அவரின் முன்னோர் போல தேவேந்திரர்கள்பால் ஒடுக்குமுறையைக் கடைபிடிக்கும் விஜயகாந்துக்கு பல்லக்கு தூக்க, ஓட்டுப்போட மட்டும் தேவேந்திரர் தேவையா? இவர் தான் சாதி சமயமற்ற தமிழகத்தைக் காண்பவரா? தேவேந்திரர்களே சிந்திப்பீர். விஜயகாந்தே பதில் சொல்? தேவேந்திரர்களே இனியும் ஒரு முறை ஏமாறப் போகிறீர்களா? தேவேந்திரர் விடுதலையை அடகு வைக்காதீர்கள்.

இங்ஙனம்
**தன்மானமுள்ள தேவேந்திரர்கள்**
கரூர் மாவட்டம்

❊ ❊ ❊

# மானமும் அறிவும் மள்ளர்க்கு அழகு

**புலவர் கி.ஆ. குப்புராசு**

*119, இலக்குமி இல்லம், பெரியார் நகர், புலியகுளம், கோவை - 641 045.*

கொங்கு நாட்டின் மகுடமாக விளங்குவது கோவை மாநகர். அம்மாநகரின் மணிமுடியாக வளர்ந்து வரும் ஊர் புலியகுளம் என்னும் பொன்னகரமாகும். அவ்வூரில் தேசபக்தியும் தெய்வபக்தியும் ஊர் மெச்ச, உலகம் வியக்க உயர்ந்து வரும் ஊர்.

ஒருகாலத்தில் புலிகள் உலாவிய காடழித்து நாடாக்கி, குளம் தொட்டு வளப்படுத்திய ஊர். சேத்துக்கால் செல்வர்கள் தனித்தே வாழ்ந்த ஊர். நில மகள் உவப்ப நெல் நாகரிகத்தைத் தோற்றுவித்த நெல்லின் மக்கள் என்ற வயல் வள மள்ளர்கள் வாழும் ஊர்.

வாலாங்குளம் அம்மன்குளம் என்ற பாசன ஏரியால் பள்ளுழவு செய்து, பயிரிட்டு, நெற்கதிரின் நிழலில் வாழ்பவர்கள். பசுங்குடி பன்னிராயிரவர் எனப் பழனிச் செப்புப் பட்டையத்தால் பேசப்பட்டவர்கள்.

பிழைப்புத் தேடி நாடுவிட்டு நாடுவந்தவர்க்கும், நற்குடி 48 ஆயிரம் எனப் போற்றப்பட்டவர்களுக்கும், உழவு செய்ய ஏரும் கலப்பையும், மேழியும் நுகமும், கயிறும் கண்ணியும் மாடும் மனையும், காடும், காணியும் தந்து வளம்பெற துணை நின்றவர்கள். பிறகு அவர்களால் நொந்து நூலாயப் போனவர்கள் எனக் கட்டிமகிபன் பள்ளு என்ற நூல் கூறும். அதுவே உண்மையாகும். (அரசியல் மாற்றத்தால், தமிழ்நாடு அந்நியர்களான தெலுங்கு, கன்னடம், முஸ்லீம் மற்றும் மராட்டியர் ஆட்சியின் கீழ் வந்தது)

காலவேறுபாட்டால் வந்தவர்க்கு இடங்கொடுத்த மருதநில மக்களை திட்டமிட்டு இழிவுபடுத்தினர். சமூகமரியாதையை கொஞ்சங்கொஞ்சமாகக் குறைத்தனர். பண்ணாடியாக விளங்கியவர்கள் பண்ணை அடிமைகளாக மாற்றினர். நெல்லைப் பெற்றுக்கொண்டு இராகி, சோளம், கம்பு போன்ற புஞ்சை தானியங்களைக் கொடுத்து உண்ண வைத்தனர். உணர்வைச் சிதைத்தனர்.

கெஞ்சுவதுமில்லை பிறர்தம் கேட்பினுக்கு அஞ்சுவதுமில்லை என வாழும் புலியகுளம் தேவேந்திர குலப் பண்ணாடி என்னும் நஞ்சை வேளாளர்கள் மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு என்ற மாண்பைக் கட்டிக்காத்து வந்தவர்கள்.

வாலாங்குளம் அம்மன்குளம் சூழ்ந்த கரவழியில் வேளாண் தொழிலை மிக வீரியத்தோடு செய்து வந்தார்கள். நெல்லறுவடைக்குப் பின் மல்லாண்டை வைத்து ஊருக்கும் உழைப்பிற்கும் உறுதுணையாக இருந்தவர்களோடு உண்டு மகிழ்வார்கள்.

சூட்டித்த வைக்கோற்புல்லை புரிசுருட்டும் பணியும் செய்வார்கள். செய்யும் தொழிலே தெய்வம் என நினைப்பார்கள். நிலாவெளிச்சத்தில் குளுகுளுவெனக் காற்றடிக்கும் இராப்பொழுது, புரிவிடுவது எளிமையானது, இனிமையானது, நல்ல சுகமானது. அப்பணியை முடித்து வாய்க்கால்களிலோ, கிணறுகளிலோ குளித்துவரும் போது ஏற்படும் சுகமே சுகம்!

**அன்னதானம்**

புலியகுளம் மேல் கடை மாரியம்மன் கோயில் வளாகத்தில் தேவேந்திர குல வேளாளர் சமூக ஊர் சபைக் கூட்டம் கூடியது. ஊர்த்தலைவரும், தர்மக்கர்த்தாவுமான சகோதரர் சின்ன மருதாசலப் பண்ணாடி தலைமை தாங்கினார். வந்தவருக்கு இலை விரித்து இனி வருகின்றவர்களுக்கு உலை வைத்து உணவிடுவோர், மானம் ஒன்றே நல்வாழ்வெனக் கொண்ட மருதநில மக்கள் பஞ்சகாலத்தில் மக்களுக்கு உணவு வழங்க வேண்டும் என விரும்பினர். பல்வேறு வழிமுறைகளை ஆராய்ந்து பின்வருமாறு ஒருமனதாக சில முடிவெடுத்தார்கள்.

1. மக்களை உட்கார வைத்து இலைவிரித்துச் சோறு போட வேண்டும். அதற்கென நல்ல நஞ்சை நிலம் வாங்க வேண்டும். பள்ளத்துள்ளான் என்றழைக்கப்படும் வெங்கடாசலப் பண்ணாடி மகன் ஸ்ரீரங்கப்பண்ணாடி தன் நஞ்சை நிலத்தைத் தருவதாகக் கூறினார். விலை பேசினர். பதினோரு பேர்கள் பங்கு வைத்துப் பணம் தந்தனர்.

2. உணவு வழங்க - மேல் கடை மாரியம்மன் கோயில் வளாகத்தில் ஊட்டுப்புறை - சத்திரம் அமைக்க - கட்ட வேண்டும். கூடியிருந்த குடும்பமார்கள் ஊர்ப்பணத்தில் ஊட்டுப்புறை கட்டுவதெனத் தீர்மானித்தனர்.

3. சமயமும், சன்மார்க்கமும் போதிக்க, கல்வி, கேள்வியை வளர்க்க, இயல், இசைக் கூத்து நடத்த - வேளாண் தொழிலை விருத்தி செய்ய புதிய வழிமுறைகளைக் காணவேண்டும். சமூகக்கூடங்கள் கட்ட வேண்டும். அன்னதானத்திற்காக கிரையம் பெற்ற பத்திரம்

9.5.1922 ஆம் ஆண்டு ஆவண எண் 1374 ஆக கோவை மாவட்ட ஆவணக் களரியில் ஆவணப்படுத்தப்பட்டது.

கோயமுத்தூர் தாலூக்கா புலியகுளம் கிராம தேவதை ஆகிய மாரியம்மனுக்கு மானுவத்திற்காக மேல்கடை மாரியம்மன் தேவஸ்தானத்திற்கு, தர்மகர்த்தாவாகிய

1. ஷை ஊரில் இருக்கும் தேவேந்திர குலப் பண்ணாடி சாதி, குடித்தன சீவனம், **சமேதார் தாசப் பண்ணாடி மகன் சின்னமருதாசலம்**

2. மேல்கடை மாரியம்மன் தேவஸ்தானத்திற்கு காரியதரிசியாக இருக்கும் ஷை சாதி ஷை சீவனம் சமேதார் **தாசப்பண்ணாடி மகன் கிருஷ்ணப்பண்ணாடி**

*3. ஷை ஊரில் இருக்கும் ஷை சாதி ஷை சிவனம்* **மருதாசலப்பண்ணாடி மகன் சங்கரப்பண்ணாடி**

*4. ஷை ஊரில் இருக்கும் ஷை சாதி ஷை சிவனம்* **பழனிப்பண்ணாடி மகன் கருப்பப்பண்ணாடி**

*5. ஷை ஊரில் இருக்கும் ஷை சாதி ஷை சிவனம்* **ஆறுமுகப்பண்ணாடி மகன் மாரியப்பப்பண்ணாடி**

*6. ஷை ஊரில் இருக்கும் ஷை சாதி ஷை சிவனம்* **வீரபத்திரப்பண்ணாடி மகன் குருநாதப்பண்ணாடி**

*7. ஷை ஊரில் இருக்கும் ஷை சாதி ஷை சிவனம்* **வீரபத்திரப்பண்ணாடி மகன் பேச்சியண்ணப் பண்ணாடி**

*8. ஷை ஊரில் இருக்கும் ஷை சாதி ஷை சிவனம்* **துள்ளாப்பண்ணாடி மகன் ஆறுமுகப்பண்ணாடி**

*9. ஷை ஊரில் இருக்கும் ஷை சாதி ஷை சிவனம்* **முத்துப்பண்ணாடி மகன் கிருஷ்ணப்பண்ணாடி**

*10. ஷை ஊரில் இருக்கும் ஷை சாதி ஷை சிவனம்* **குப்பண்ணப்பண்ணாடி மகன் காத்தப்பண்ணாடி**

*11. ஷை ஊரில் இருக்கும் ஷை சாதி ஷை சிவனம்* **குட்டைய கருப்பப்பண்ணாடி மகன் சின்னையன் என்ற கருப்பப்பண்ணாடி**

*உங்கள் பதினோறு பேரின் உத்தரவின்படிக்கு. கீழ்க்கடை மாரியம்மனுக்கு ஊர் ஷை சாதி ஷைசிவனம்* **வெங்கடாசலப் பண்ணாடி மகன் ஸ்ரீரங்கப் பண்ணாடி** *எழுதி வைத்துக் கொடுத்த கிரைய சாசனம்.*

*என்னவென்றால் எனக்கு 1919 சூலை மாதம் 4 ஆம் தேதியில் கிரையப் பாத்தியப்பட்டு என் சுகானுபோக சுவாதீனத்தில் இருக்கின்ற தாவர சங்கமசொத்தை ரூபாய் 1500/- மூபலகு ஆயிரத்தைனூறு ரூபாயினுக்கு சீரங்கப்பண்ணாடி கிரையம் செய்து கொடுத்தார்.*

*கோவை தாலூக்கா புலியகுளம் கிராமம் க.ச.எண்:66/1ல் 1 ஏக்கர் 16 சென்ட், நஞ்சை 1 போக சாகுபடிக்குரிய ஆவணம் பசலை முடிகிறது.*

*இந்திய தேசிய விடுதலைப் போராட்டம் 1750 ஆண்டில் முதன் முதலாக நடைபெற்றது. அப்போராட்டத்தில் ஆணும் பெண்ணுமாக தேவேந்திர குல வேளாளர் சமூக மக்கள் கலந்து கொண்ட வீர வரலாறு மறைக்கப்பட்டது. காரணம், தங்களுக்கு உரிய சாதியப்பட்டம் போடாமையால் அடையாளப் படுத்தாமையால் எனலாம்.*

*1857 ஆண்டில் நடைபெற்ற விடுதலைப் போரை மையமாக வைத்து, தேவேந்திர குல வேளாள மக்கள் பற்றிய கருத்துக்களை, செயல்பாடுகளை, உண்மைக்கு மாறாகத் திரித்துக் கூறப்பட்டுள்ளது. தங்கள் அடையாளக் குறியீடுகளை அழிக்கப்பட்டது என* **சேதுபதி செந்தமிழ்த் திரட்டு** *என்ற நூலில் பேராசிரியர் நா. இராசையா பதிவு செய்துள்ளார்கள். அதல்லாமல்* **கொங்கு நாட்டில் இந்திய சுதந்திரப் போராட்டம்** *என்ற பெரிய நூல் பக்கம் 138 பார்க்க.*

*பழைய கோவையின் கிழக்கு எல்லையில் இருந்தது புலியகுளம், இது புலியகுளம் என்ற குளத்தை ஒட்டி ஏற்பட்ட ஊர். எனவே புலியகுளம் எனப் பெயர் பெற்றது. இவ்வூர் சமுதாயத்தால் மிகமிகப் பின் தள்ளப்பட்ட பெருமக்கள் வாழ்விடமாக இருந்தது. அம்மக்கள் அன்பிற்காக தங்கள் உயிரையும் கொடுக்கும் தன்மை உடையவர்கள். அவர்கள் நாட்டின்பால் கொண்டிருந்த அன்பால் சுதந்திரப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் அவர்கள் (தேவேந்திர குல வேளாளர்கள்) ஈடுபாட்டினை வெளிக்கொணர, அரசு விரும்பவில்லை. தியாகிகள் எண்ணிறந்தவர்களாக உள்ளனர் என்ற கருத்து இன்னும் பலரை ஈர்க்கும் என்ற அச்சமே காரணம் என அம்மக்கள் தேசப்பற்றைப் படம்பிடித்துக் காட்டிய ஆவணங்கள் என்னால் மள்ளர் மலரில் எழுதப்பட்டதை விரிவாகக் காணலாம்.*

*புலியகுளம் பெரிய ஊர். 18 குடும்பங்கள் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு குடிபுகுந்தனர். காடழித்து நாடாக்கிய ஊர். அதில் 6 குடும்பத்தில் சிலர் கிருத்துவ மதத்திற்கு மாறினார்களாம். சந்தியாகுப் பண்ணாடி குடும்பத்துப் பெரியவர்கள் - மணியகாரராக இருந்தார்களாம். 1824 ஆம் ஆண்டு தூய அந்தோணியார் கோயில் கட்டப்பட்டது. இந்துக்களும் மகமதியர்களும் செவ்வாய்க் கிழமைகளில் பெருந்திரளாக வந்து வணங்கிச் செல்கின்றனர். கிருத்துவ சமயத்தார்களின் புகழ்மிக்க கோயிலாக மதிக்கப்படுகிறது.*

*முந்தி விநாயகர் கோயில் என்ற அமைப்பை புலியகுளம் தேவேந்திர குல வேளாளர் சமூக இளைஞர்கள் தேவேந்திர மள்ளர் திரு. அருணகிரிநாதர் தலைமையில் உருவாக்கினார்கள். இச்சிலை ஆசியக் கண்டத்திலேயே பெரியது என்று கூறுவார்கள். தேவேந்திர விநாயகர் சிலை மட்டும் 16 அடி 6 அங்குலம் உயரமும் 11 அடி 6 அங்குலம் அகலமும் உள்ளதாக வடிவமைக்கப் பட்டுள்ளது. தற்போதுள்ள பீடக்கல் 70 டன் எடையுள்ளதாகும். பீடம் 14 அடி 5 அங்குலம் நீளமும் 10 அடி 3 அங்குலம் அகலமும் கொண்டதாக அமைந்திருக்கிறது. விநாயகர் சிலை நிலைநிறுத்திய பின் 19 அடி 10 அங்குலம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. மொத்தம் சிலையும் பீடமும் 180 டன் எடை எனக் கூறுவார்கள்.*

*அதற்குப் பின் மூசிக வாகனம் கருங்கல்லால் சிலா ரூபமாகச் செதுக்கி பீடத்தின் மீது நிலைநிறுத்தப்பட்டுள்ளது. அதன் உயரம் 3 அடி 4 1/4 அங்குலம், 2 அடி கனமுடையதாகும். அம்மட்டோ...?*

*இளம் வயதில் காசி, கயா, அமர்நாத் போன்ற புண்ணியச் சேத்திரங்களுக்குச் சென்று வந்தவர் திருமுடி இராசேந்திரனாவார். இவர் ஜம்மு-காஷ்மீரில் ஓம் நமோநாராயணகிரி என்பவரைக் கண்டு, மக்கட் சேமத்திற்காக வேண்டியுள்ளார். உலோக இரும்பினால் சனீஸ்வர பகவான் சிலையும், காகவாகனமும் செய்து வழிபாடு செய்யப் பணிந்துள்ளார்கள்.*

*கோவை புலியகுளம் அருள்மிகு மாரியம்மன் வளாகத்துள் காண்போர் கையெடுத்துக் கும்பிடும் கலையழகோடு, சிற்பசாஸ்திர முறையில், ஆகம விதிக்குட்பட்ட நிலையில், பெரும்பொருட் செலவில் தனிமனிதனாக இருந்து செய்த சனிபகவான் ரூபவாகனராகக் காட்சி அளிக்கிறார்.*

முற்றும் இரும்பால் செய்யப்பட்ட சனிபகவான் சிலையின் உயரம் 5 அடி 6 அங்குலம். 2 அடி 6 அங்குலம் அகலம். இதன் எடை 800 கிலோ. காகபூசனம் என்ற சனீஸ்வரனின் வாகனத்தின் உயரம் 2 அடி 4 அங்குலம். 3 அடி 11 அங்குலம் நீளம் கொண்டது. காகபூசனம் என்ற காகத்தின் எடை 400 கிலோ. பீடம் அம்மன் பீடத்திற்கு சற்று தாழ்ந்து சுமார் 1500 கிலோ எனலாம்.

உயர்வற உயர்நலம் உடையவன் எவன் அவன்
மயர்வற மதிநலம் அருளியவன் எவன் அவன்
அயர்வறும் அமரர்க்கு அதிபதி எவன் அவன்
துயரறு சுடரடி தொழு தெழு மனனே

என்ற நிலையில் உயர்வான நோக்கில் இறையுணர்வை வெளிப்படுத்துகிறார்கள்.

இனி கலைகளை வளர்க்கவும், கலையுரைத்த கற்பனையாம் புராணங்களைப் படிக்கவும் ஏன் நடிக்கவும் ஒரு நிறுவனத்தை உருவாக்க வேண்டும் என முடிவெடுக்கிறார்கள்.

1915 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் தேதி (8.11.1915) கோயமுத்தூர் தாலூக்கா புலியகுளத்தில் இருக்கும் மள்ளசாதி குடித்தன சீவனம் சமயதாரர் தாசப்பண்ணாடி மகன் தருமகருத்தா சின்னமருதாசலத்திற்கு 1. ஷையூர் ஷைசாதி கூலி சீவனம் மருதன் பெண்சாதி குள்ளி என்று அழைக்கிற குப்பாய். 2. ஷை ஊர் ஷை சாதி ஷை சீவனம் ரங்கசாமி மகன் கோவிந்தன். நாங்கள் இருவரும் எழுதி வைத்த கிரைய சாசனம் என்னவென்றால் எங்களுக்குப் பிதூர் ராச்சிய வகையில் பாத்தியப்பட்ட எங்கள் அனுபோக சுவாதீனத்தில் உள்ள சொத்தை ரூபாய் 24 க்கு கிரைய சாசணம் செய்து கொடுக்கிறோம் என்ற ஆவணம் கோவை ஆவணக் களரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆவண எண் : 1318 / 1915.

இந்தக் கிரயம் மூலம் வாங்கப்பட்ட இடமே இன்று சிவராம பஜனை மடமாகக் காட்சியளிக்கும் நிறுவனம். கலைகளை வளர்க்கவும், கலையுரைத்த கற்பனையாம் புராணங்களைப் படிக்கவும், ஏன் நடிக்கவும் பஜனை மடம் கட்ட விரும்பினர். சைவ வைணவ உறவை வளர்க்க சிவராமபஜனை மடம் எனப் பெயர் சூட்டினர். தென்னிந்தியா ரயில்வேயில் போர்மேனாகப் பணிபுரிந்தவர் திரு. மா.வீ. பேச்சியண்ணப் பண்ணாடி நாடக ஆசிரியராக இருந்து, இராமாயணம் நாடகம் நடத்தப்பட்டது. பேச்சியண்ண வாத்தியார் இராமனாகவும், கட்டுரை ஆசிரியரின் தந்தை தா.கி.ஆறுமுகப்பண்ணாடி இராவணனாகவும் நடித்து மக்கள் மனதில் இடம் பிடித்துள்ளார்களாம்.

பசனை மடத்தில் தேவாரம், திருவாசகம், திவ்வியபிரபந்தம் - சித்தர்கள் பாடல்கள் பாராயணம் செய்வார்களாம். பண்டு நடத்துதல், பண்டுப்பணத்தில் பல சரக்குக்கடை நடத்துதல் என்ற முற்போக்குச் சிந்தனைக்குச் சொந்தக்காரர்களாக விளங்கினார்கள். இராமாயணம், கந்தபுராணம், அரிச்சந்திர புராணங்கள் அவர்கள் நடத்திய நாடகங்கள் எனத் தெரிய வருகிறது.

1821 ஆம் ஆண்டு முதல் தேவேந்திர குல பஞ்சாயத்து சபை என்ற அமைப்பை நடத்தி வந்ததற்கான சான்று ஆதாரங்கள் இன்று ஊர்த் தலைவராக இருக்கும் சமேதார் குடும்பத்தாரிடம் இருக்கிறது. மார்க்கோபோலோ பயணக் குறிப்பில் பாண்டிய மன்னன் குதிரை வாங்கி கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட தாமதத்திற்கு பாண்டியின் மேல் ஆணை என்ற ஒரு கல்லையோ ஓட்டையோ எடுத்து ஒருவட்டமிட, அந்த பாண்டியன் ஆட்சிச் சக்கர எல்லையில் உள்ள எல்லாரையும் கட்டுப்படுத்தும் ஆட்சிமுறை, மன்னனையுமீட்சியுறு முடியாமல் வட்டத்தில் நின்றதைப் போல், இன்றும் குற்றம் சாட்டப்பட்டவர் வட்டம் போட்டு நிற்கவைத்து நியாயம் கேட்கும் ஆட்சிமுறை தேவேந்திர குல வேளாளர் சமூக பஞ்சாயத்து முறை 1821 ஆம் ஆண்டு முதல் ஆவணத்தில் உள்ளது.

அத்தகைய பஞ்சாயத்து சபையாரின் தீர்மானப்படி தான் புலியகுளத்தில் கல்லூரியினுள் காலடி வைக்கும் மாணாக்கர்களுக்கு ஊக்கத் தொகை, உதவித்தொகை தந்து வந்தார்கள். அவ்வுதவித் தொகைப் பெற்றவர்கள் முதல்வராக விளங்குபவரில் மிகச் சிலர் :

1. சு.ஆறுமுகம் B.A., B.E., I.R.S., இந்திய ரயில்வேயில் ட்ரேபிக் சிக்னல் முதன்மைப் பொறியாளராக இருந்து ஓய்வு பெற்றவர். 2. க. நடராசு B.E., I.R.S., இந்தியா நேபால் குலாப்பரேசனின் வாட்டர் போர்டு - எலெக்ரிசிட்டி டைரக்டராக இருந்து ஓய்வு பெற்றவர். 3. து. முருகராசு M.A., I.A.S., தேர்வுக்குழு சேர்மெனாக இருந்து ஓய்வு பெற்றவர். 4. சு.க. தினபந்து M.A., I.A.S., மத்திய அரசு, மாநில அரசுகளில் பல உயர் பதவியில் இருந்து வருபவர். 5. மு.கோவிந்தசாமி M.B.B.S., M.D., மருத்துவக் கல்லூரி டீனாக இருந்து ஓய்வு பெற்றவர். 6. மேலும் ஆட்சித்துறை காவல்துறை, கல்வித்துறை, வேளாண் துறையில் வணிகத்தில், தொழில்துறை என எல்லாத் துறையிலும் நாளும் நாளும் வளர்ந்து வரும் வாய்ப்பை நல்கிய முன்னைய சமூகப் பெரியவர்களுக்கு நன்றி செலுத்தி, இனிவரும் தலைமுறையினர்களுக்கு வழிகாட்டி வருகிறார்கள். ஆண்களும் பெண்களும் போட்டி போட்டுக் கொண்டு இலண்டன், அமெரிக்கா, அரபு நாடுகளில் தொழில் செய்கிறார்கள்.

சமூக வளர்ச்சிக்கு கல்வி, பொருள், தொழில், ஒழுக்கம், நாணயம், நம்பிக்கை, நல்லொழுக்கம் தேவை. அத்தகைய பண்புகளுடன் கரைபடாத கரத்திற்குச் சொந்தக்காரர்கள் புலியகுளத்தில் பிறந்த உயர்பதவி பெற்ற நற்குடிமக்கள் பலராவார்கள்.

போற்றுதலுக்குப் பொன்னகரமாக விளங்கும் புலியகுளம் வாழ்பெருமக்கள் பொதுமக்களுக்கும் இனப்பற்றும் தேசப்பற்றும் தெய்வப்பற்றும், தனிமனித முயற்சியுமே காரணம்.

மானமும் அறிவும் மாந்தர்களுக்குத் தேவை. ஏன் சற்று சுயநலநோக்கில் பார்த்தால் மானமும் அறிவும் மள்ளர்களுக்குத் தேவை. இதை முன்மாதிரியாக எடுக்கலாம். பேராசிரியர் டாக்டர் குருசாமி சித்தர் புலியகுளம் வரலாற்றை, பஞ்சாயத்து முறையை எழுதப் பணித்தார்கள். பரிச்சாத்தமாக முன்னுரையாக வைக்கப்பட்டதே இவ்வுரை.

❁ ❁ ❁

# அன்புள்ள ஆசிரியருக்கு

## நாமக்கல் மாவட்டம் பாண்டமங்கலம்

- இந்திராணி குடும்பிச்சி

**பிறந்த ஊர் வரலாறு**

இந்த ஊர் எப்பொழுது தோன்றியது என்பது தெரியாத நிலையில் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த அரசு பதிவுகளில் (தஸ்தாவேஸ்களில்) சேலம் மாவட்டம் இராசிபுரம் வட்டம் கட்டணாச்சம்பட்டி என்ற கிராமத்திற்குட்பட்ட அத்திப்பள்ளம் புதூர் சுமார் 10 ஏக்கர் நிலப்பரப்பில் (நத்தம்புறம்போக்கு) இதன் நான்கு பக்கங்களும் போதமலை, இராசிபுரம் கொல்லிமலை மற்றும் அழகர்மலை இவற்றிற்கு இடையில் இரண்டு குடும்பத்தார்கள் இராமன் மற்றும் அத்தி தேவேந்திரர்கள் எங்கிருந்து வந்து முதலில் குடியேறினார்கள் என்பதை எனது பாட்டன் திரு. காமாட்சி அரசுகுமார் என்பவர் 100 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்து நல்ல திடகாத்திடகரத்துடன் இருக்கும் பொழுது இந்த ஊர் தோன்றிய வரலாற்றில் அரசகுமார் பாட்டன் அவருக்குச் சொன்னதாக என்னிடம் சொன்னார். இவர்களுக்கு பின்னர் பல தேவேந்திர பயிர்கள் குடிவந்ததாகவும், நாளடைவில் ஊர் பெரியதாகவும் வளர்ச்சி அடைந்து, தற்போது 200 குடும்பங்களுக்கு மேல் தேவேந்திர பயிர் என்றவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

மேற்குடியிருந்த தம்பதியர்களுக்கு எனது தந்தை திருமதி கருப்பாயி ஆறுமுகம் என்பார் 6வது குழந்தையாக பிறந்தார். இவர்களுக்கு தான் 2வது மகனாக புரட்டாசி மாதம் முதல் சனிக்கிழமை 1937ல் கலியபெருமாள் பிறந்தார். போதமலை அடிவாரத்தில் அத்திமர பள்ளத்தாக்கு இருந்ததாகவும் அத்திமரங்கள் அதிகம் இருந்ததாகவும் இந்த ஊருக்கு ராமன், அத்தி ஆகிய இருவர் வந்து குடியேறியதாகவும் பெயர் வந்ததாகவும், பின்னர் மருவி தற்போது அத்திபலகானூர் என்று அரசு தஸ்தாவேஸ்களில் உள்ளது. இங்கு வாழ்ந்து வரும் மக்கள் அனைவரும் தேவேந்திர பயிர் குலத்தவர்கள் தான். ஊர் தோன்றிய காலம் முதல் நான் பள்ளிச் செல்லும் வரை கல்வியைக் கற்றவர்கள் இல்லை. பாமர மக்களாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

கல்வியைப் பற்றி அறியாமல் ஊர்கள் இருக்கும்பொழுது எனது கணவர் ஒருவர் மட்டும் படித்து அரசு வேலையில் இருக்கிறார் என்று தெரிந்தபொழுது என் திருமணத்தைப் பெரியதாக நினைத்து என்ன மகிழ்ச்சி அடைந்தேனோ அதனினும் மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தேன். இன்றும் மாறுபடாமல் நல்ல குடும்பம் பல்கலைகழகம் என்பதை உணர்ந்து "தெள்ளிய ஆழின் சிறுபழத்தொரு விதை தென்னீர்கசிந்து சிறுமீன் கிளையினும், நுண்ணியதே ஆயின் அண்ணல் பெருந்தகை ஆட்பெறும் படையுடன் மன்னருக்கு இருக்க நிலாகுமே" என்ற பாடலுக்கு இணங்கவும் எக்குடி பிறப்பினும் யாவார் ஆயினும் அக்குடியில் அறிவில் சிறந்தவர் மேல் வருக என்பார் என்ற வாக்குக்கு எடுத்துக்காட்டாக, எனது கணவர் வாழ்ந்து ஓய்வு பெற்று இருக்கிறார் என்றார். இந்தப் பெருமை அவரை ஈன்ற பெற்றோர்களைத் தான் சேரும் என்று பெருமைப்பட தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். எனது திருமணத்திற்குப் பின்னமும் இன்றுவரை அவரை பள்ளிகூடத்தான் என்று அழைக்கிறார்கள். உண்மை பெயரைத் தெரிந்தவர்கள் 1 - 2 பேர் இருப்பார்கள் என்பதை அகம் மகிழக் கூறுகிறேன்.

**தேவேந்திரர்களின் ஊர் பொது மாரியம்மன் திருவிழா பற்றிய வரலாறு**

இந்த ஊரின் மத்தியில் அனைவரும் ஒருமித்து இணைந்து ஒரு கோயில் கட்டியிருக்கிறார்கள். தொன்றுதொட்டு வரும் ஐப்பசி மாதம் திருவிழா சாட்டி 16ம் நாள் சத்தி அழைத்தல் என்ற வகையில் **ஊர்ப் பலகான்** என்பார் வீட்டில் ஒரு கூடையில் மாவு, பழம் வைத்து அவருக்கு வெள்ளைப் பாவாடை உடுத்தி முப்பாடு என்ற கூடையை தலையில் வைத்து ஒருவர் குதிரை பிடித்து வருவார்கள். அம்மன் கோவிலில் இருந்து வடபுறம் ஒருநாட்டில் அம்மனை அழைத்து வந்து கோவிலில் விட்டுக் களைவார்கள். பின்னர் ஓடும்பிள்ளை என்பவர் தாழம்பூ இதழ் வீடு தவறாமல் கொடுத்து வருவார். அதனைப் பெற்று சமைத்த சாதத்தை படையல் போட்டு கருவாடு கத்தரிக்காய் குழம்புடன் சாமி கும்பிடுவார்கள். பின்னர் பொங்கல் வைப்பார்கள். கடா வெட்டுவார்கள். அக்கினிசட்டி எடுப்பார்கள். அன்று மாலையே மாவு இடித்து மாவிளக்கு, அலகு குத்துதல் நடைபெறும். அம்மன் கோவில் தேங்காய் பழம் வைத்து கும்பிட்டு அவரவர் வீடுகளுக்குச் சென்று விடுவார்கள். புதன்கிழமை இரவு சுமார் 9 மணியளவில் நாடகத் தொடக்க விழா நடைபெறும். தேவேந்திர குடும்பன் இந்திரலோகத்தில் இருந்து பூலோகத்திற்கு வந்த வகையை மக்கள் அறிந்து கொள்ளுமாறு மிக அருமையாக பாடல்கள் வசனங்கள் அதற்கு ஏற்ற மாதிரி நடிப்பு, நடனம் அமைத்துக் காண்பிப்பார்கள்.

இந்திரன் மகனாகப் பிறந்த தேவேந்திரன் பூலோகத்திற்கு வரும்பொழுது வெள்ளையானை வெஞ்சாமரம் வெண்சக்கரக் குடையுடன் தனது மனைவிமார்கள் இருவர் உடன் வந்து இறங்கினார் என்பதை நன்கு அழகாகக் கூறுவர். தேவேந்திரன் பூலோகத்திற்கு வந்த பெண்கள் இந்திரலோக நடனம் ஏழு கன்னிகள் என்றும் இந்திரன் மனைவிமார்கள் என்றும் கூறுவார்கள். தேவேந்திரன் பூலோகத்திற்கு வரும்பொழுது விவசாய விதைப் பொருட்களை வெள்ளையானை வால் மூலம் கோர்ந்து நெல், கரும்பு, வாழை விதைகளைக் கொண்டுவந்து பூலோக மக்களுக்கு நெல்விளைவிதை காண்பித்து அதற்கான நெல்பயிர்களைக் கூட நாடகத்தில் தெரிவிப்பார்கள். தேவேந்திரனுக்கு வல்லக்கொடியில் பிறந்த வடிவேல்

குடும்பன் என்ற பெயரும் தொன்றுதொட்டு வழங்கி வருகிறது.

இவன் பூலோகத்தில் வந்து இறங்கிய பின்னர் தான் இஞ்சி, எலுமிச்சை, மஞ்சள், மாதுளை, கொஞ்சி, கொழிஞ்சி பழவகைகள் தோன்றியதாக வரலாறு படைக்கிறது. இவரது வருகைக்கு முன் பூலோகத்தில் மேற்சொன்ன நெல் மற்றும் இதர விவசாய விதைகள் இல்லை என்பது உண்மையாகிறது. நெல் வகையை எண்ணி முடித்தாலும், பள்ளு வகையை எண்ணி முடிக்க முடியாது என்று பழமொழியும் உலக அளவில் இன்றும் இருந்து வருகிறது.

வரலாற்றுப் புராணமாக விளங்கும் வள்ளித் திருமணம் என்ற நாடகத்தில் கூட கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றிய முருகன் வள்ளியை மணக்க, தினைபுனம் காவல் காத்த வள்ளியை புஞ்சைபயிர் செய்துள்ள தினைப் பயிருக்கு காவல் காத்துவரும் வள்ளியை தேடிச் சென்றதாகவும், அவன் அங்கு கருங்கல் பரண்மீது இருந்து வீசிக்கொண்டு இருந்தான். குருவிகளைத் துரத்திக் கொண்டு இருந்ததாகவும் நாடகத்தின் மூலம் பாடல்கள் மூலம் நன்கு அறிந்து இருக்கிறோம். முருகன் வேங்கை மரமாகி பின்னர் கிழவர் வேடம் தரித்து அவளிடம் இசைவு பெற்று அவளும் நப்பதலுடன் மணம் முடித்ததாக நாடகத்தின் வாயிலாகவும் பாடல்கள் மூலமாகவும் தற்போதும் அறிந்த கதை மறுக்க முடியாது. இது நடந்ததாக வள்ளித் திருமணம் என்னும் நாடகத்தின் மூலம் தெள்ளத் தெளிவாகப் படித்தும் பார்த்தும் இருக்கிறோம்.

வள்ளி தினைபுனம் காவலுக்கு கருந்தானியம் விளைத்துள்ள நிலத்தில் தான் காவல் புரிந்து இருக்கிறார். அக்காலத்தில் நெல் வயல்கள் இல்லை என்பதும் உண்மையாகிறது. எனவேதான் தேவேந்திரன் பூலோகத்திற்கு வந்து தான் நெல், வாழை, கரும்பு போன்ற நஞ்சை பயிர்கள் செய்துள்ளான் என்பதும் மறுக்க முடியாத உண்மை. தேவேந்திரன் மனைவிகள் இருவரும் கற்புநெறி தவறாதவர்கள் என்பதற்கு முக்கூடல் பள்ளு என்ற பாடல் நூல் வழியாக அறிய முடிகிறது. வள்ளுவ பொய்யாமொழி புலவர் அவர்களும் கற்புடை பெண்டிர் மழை பெய் என்றால் பெய்யும் என அந்தக் காலத்தில் பாடிய பாடல்களிலிருந்து அறிகிறோம்.

தேவேந்திரன் பூலோகத்திற்கு நெல் கொண்டு வந்து பயிர்த் தொழில் மட்டும் செய்துள்ளான் என்பதையும் அதனால் இவர்களுக்கு தேவேந்திர பயிர் என்ற பெயர் என்பதைப் பண்டைகால அரசு தஸ்தாவேஸ்களில் பார்க்க முடிகிறது. இன்றும்கூட நெற்பயிர் நடவு செய்ய தேவேந்திர குலப் பெண்கள் பயிர் நடவு தொழில் செய்து வருகிறார்கள். இதனைக் கண்கூடாக நடைமுறையில் நடந்து வருகிறதும் உண்மை.

பாண்டமங்கலம் 1.2.06

தங்களின் உண்மையுள்ள
நம் வம்சம் மேலும் வளர்ச்சி அடைய
வாழ்த்தும் பாசமிகு அன்பு சகோதரி
**A.K. இந்திராணி குடும்பிச்சி**

❊ ❊ ❊

**டாக்டர் தி. கமலி** 20.2.2006

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்,
ஆய்வு விரிவாக்க மையம்,
சைதாப்பேட்டை, சென்னை - 15.

பெருமதிப்பிற்கும் பேரன்பிற்கும் உரியீர், வணக்கம்.

மள்ளர் மலர் 2006 கிடைத்தது. அட்டையில் வெளிவந்த அறிவிப்பு படித்தேன். எப்போதோ எடுக்க வேண்டிய முடிவு இது. இப்போது எடுத்திருப்பது வரவேற்றற்குரியது. சாதனை படைக்க மனங்கனிந்த நல்வாழ்த்துக்கள்!

வலங்கைமான் மாரியம்மன் கோவில் பாடைக்காவடி திருவிழா, மீன் திருவிழா பற்றிய கட்டுரையை வெளியிட்டிருந்தீர்கள். நன்றி. வலங்கைமான் சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் திருமதி. பூபதி மாரியப்பன் (2001 - 2006) பற்றிய தகவலைத் சேர்த்து 'update' செய்துள்ளீர்கள். (முன்னர் எழுதிய கட்டுரை இது) நன்றி.

ஞானிக்குச் செம்மொழி விருது, மள்ளர் மீட்புக் களத்தின் பாவாணர் விருதளிப்பு, செங்கோட்டுப் பள்ளு என இலக்கியப் பரிமாணங்களில் பயணித்தல் கவனித்தற்குரியது.

இனவாத ஒடுக்குதல் / சாதிய ஒடுக்குதல் / பாலின ஒடுக்குதல் / பொருளியல் சார் ஒடுக்குதல் / அதிகாரஞ்சார் ஒடுக்குதல் என அனைத்தையும் கடந்து, மீட்சி பெறுதல் பெரும்போராட்டமே! உங்களைப் போன்று முன்னெடுத்துச் சென்றால் இன்றில்லை என்றாலும், நாளையேனும் நல்லது நடக்கும். பணி சிறக்க வாழ்த்துக்கள். நன்றி.

தங்கள் உண்மையுள்ள
**தி. கமலி**

❊ ❊ ❊

**வீ.எஸ். ராஜகோபால்**

பத்திரிகையாளர்
நவீன ஜோதிடம் மையம்
1010 - Block - 1 - Janapriya Town
Bangalore (N) - 562 130.

இனியவரே! வணக்கம். எனக்கு மள்ளர் மலர் தொடர்ந்து அனுப்பப்பட்டு வருகிறது. நன்றி. பண்டைக்கால தமிழர் வாழ்க்கை - கல்வெட்டுக்கள் பற்றிய செய்திகள் இவைகளை வெளியிட்டு வருகிறீர்கள் சிறப்பாக உள்ளன. இதையெல்லாம் படிக்கும்போது இத்துணை செய்திகளையும் எப்படித்தான் சேகரித்து பிரசுரிக்கிறீர்களோ என்னும் வியப்பு ஏற்படுகிறது. பாராட்டுக்கள். பிப்ரவரி இதழில் வலங்கைமான் மாரியம்மன் ஆலயம் பற்றிய கட்டுரை பக்தர்கள் ஆலயத்தில் செய்யும் வித்தியாசமான நேர்த்திக் கடனைப் பற்றி, பராசக்தியின் அருளைப் பற்றி, அனைவருக்கும் புரிய வைக்கிறது! மற்ற கட்டுரைகளும் நன்றாகவே உள்ளன.

**வீ.எஸ். ராஜகோபால்**

❊ ❊ ❊

பி. இராமநாதன் 15.2.2006
சென்னை - 16.

அன்புள்ள மள்ளர் மலர் ஆசிரியர் அவர்களுக்கு,

மள்ளர் மலர் பிப்ரவரி 2006 இதழில் என்னுடைய வரலாற்றுப் பார்வையில் சங்க இலக்கியம் தற்கால ஆய்வுகளின் அடிப்படையில் சில கருத்துக்கள் கட்டுரையை வெளியிட்டதற்கு உளமார்ந்த நன்றி. இத்தகைய கட்டுரைகள் (இவ்வளவு தரமாக தமிழிலும், ஆங்கிலத்திலும் எந்தப் பிழையின்றியும், நூற்பெயர்கள், எண்கள் போன்றவற்றை ஒழுங்காகவும்) வெளியிடக்கூடிய தமிழிய, தமிழிலக்கிய இதழ்கள் எவையும் இருப்பதாகத் தெரியவில்லை. (அவை வெளியிட விழையுமா என்பதும் ஐயமே!)

பின்வரும் புத்தகங்களைத் தங்கள் நூலகத்துக்காக அனுப்பியுள்ளேன்.

1. A.L. Basham (II Edn 1966)(இன்றியமையாத பார்வை நூல்) The wonder that was India

2. John Colliet (1948) Indian of the Americas; வெள்ளையர் வட/தென் அமெரிக்கப் பழங்குடிகள் அழித்தொழித்த கொடுமைகளைச் சுருங்கக் கூறுவது பொழுதுபோக்காகப் படிக்கலாம்.

3. இ. நாச்சிமுத்து (1989) சோழன் பூர்வ பட்டயம் கூறும் கொங்குநாட்டு ஊர்கள் பெயராய்வு வரலாறு.

(கொங்குப் பகுதியினருக்கு இதில் பயன் கிட்டலாம்).

4. Oommen, MA (1971) Land, Reforms and Socio-Economic change in Kerala, Seep 12

மீண்டும் நன்றி, வணக்கம்.

அன்புள்ள
பி. இராமநாதன்

❊ ❊ ❊

தங்க. சங்கரபாண்டியன் 16.2.06
71/1 - அ11 மணலிப்புது நகர், சென்னை - 600 103.

அன்புடையீர் வணக்கம்,

மள்ளர் மலர் பிப்ரவரி 2006 இதழ் கண்டேன். தங்கள் சீரிய தலைமையின் கீழ் சிறப்புற இயங்கிவரும் தேவேந்திரர்களின் அனைத்திந்திய தமிழக முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தமிழ்நாட்டில் சுமார் 150க்கும் மேற்பட்ட தொகுதிகளில் போட்டியிட முடிவு செய்துள்ளன. நான் உள்ளன்போடு வரவேற்றுப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். பிரிட்டனின் செய்தி ஊடகங்களின் இனவாத ஒடுக்குதல்களும் இந்தியாவின் செய்தி ஊடகங்களின் சாதியவாத ஒதுக்குதல்களும் - தலையங்கம் அருமையிலும் அருமை. தமிழ் வளர்ச்சியை மட்டுமே கருத்தில் கொண்டு பாடுபட்டு வரும் மள்ளர் மலரின் தமிழ்த் தொண்டுகளைப் புகழ்ந்துரைக்க வார்த்தைகள் இல்லை. தங்கள் தன்னலம் அற்றத் தமிழ்தொண்டு வாழ்க! தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்ததுண்டோ? - பாவேந்தர்


அன்புடன்
தங்க. சங்கர பாண்டியன்

❊ ❊ ❊

புது சமூகவியல் நூல்

## மீனவர் வரலாறு மீட்டுருவாக்கம்

| | | |
|---|---|---|
| நூல் | : | பரதவர், இன மீட்டுருவாக்க வரைவியல் |
| ஆசிரியர் | : | முனைவர் அரு. பரமசிவம் |
| அளவு | : | டெமி, பக்கங்கள் 26 + 152, விலை ரூ.90 |
| வெளியீடு | : | 2005, காவ்யா, 16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்டிபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024. |




பரதவர் சமூக வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்யும் பணியில் நூலாசிரியரால் பல இலக்கியம் மற்றும் கல்வெட்டுச் செய்திகளைத் தொகுத்துத் தந்துள்ளார்.

❊ ❊ ❊

## திருமண வாழ்த்துக்கள்

**திருவளர் மள்ளர் க. நந்திவர்மன்** M.Sc., M.Ed., M.Phil., B.L.I.S.,
**திருவளர் மள்ளி சா. சுஜி** M.Sc., B.Ed., PGDND.,

திருச்சி மாவட்டம் இலால்குடி வசந்தநகர் தெய்வத்திரு கந்தசாமி மூப்பனார் - சுப்பம்மாள் மள்ளத்தியார் பேரனும் **சு. கலைச்செல்வன் தேவேந்திரர் - திருமதி மணிமேகலை மள்ளத்தியார்** குமாரருமான **நந்திவர்மனுக்கும்** கோயம்புத்தூர் சொக்கம்புதூர் தெய்வத்திரு பெரியசாமிப் பண்ணாடி - முனியம்மாள் பண்ணாடிச்சி பேத்தியும் **சாரங்கபாணி தேவேந்திரர் - திருமதி யமுனாபாய் மள்ளத்தியார்** குமாரத்தியுமான **சுஜிக்கும்** 17.2.2006 கோவையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. தேவேந்திர குல வேளாளர் சங்க மாநிலத் தலைவர் பேராசிரியர் டாக்டர் குருசாமி சித்தர், திரு. இரா.செ. இராச தேவேந்திரர், டாக்டர் மனுநீதிச் சோழன், டாக்டர் சி. கிருஷ்ணன் எம்.பி., மற்றும் அரசியல் முக்கியஸ்தர்களும், உறவினர்களும், நண்பர்களும் பெருந்திரளாக வந்து மணமக்களை வாழ்த்தினர். மணமக்களுக்கு மள்ளர் மலரின் வாழ்த்துக்கள்.

❊ ❊ ❊

# இருங்கோவேளின் தோற்றமும் வழித்தோன்றல்களும்

திரு. பி. இராமநாதன் தமிழர் வரலாறு பற்றி பல நல்ல ஆய்வுக் கட்டுரைகளை எழுதும் வழக்கறிஞர். அவரின் ஆய்வுகளின் தொடக்க காலத்தில், கி.பி. 1969 இல் ஆசிய மற்றும் ஆப்பிரிக்கா ஆய்வுகள் பள்ளியின் இதழ் தொகுதி 32, பகுதி - 2, 1969 (Bulletin of the School of Oriental and African Studies, University of London vol XXXII, Part 2, 1969). லண்டன் பல்கலைக்கழக இதழில் ஆங்கிலத்தில் 'இருங்கோவேளும் கோட்டை வேளாளர்களும் ஒரு இறுக்கமான சமூகக் குழுவின் தோற்றம்' (Irunkovel and the kottai velalan - The Possible Origin of a closed community) என்கிற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

கோட்டை வேளாளர் அல்லது நன்குடி வேளாளர் (நற்குடி வேளாளர், செவலை பிள்ளைமார்) தான் சங்ககால இருங்கோவேளிர்கள் வழித்தோன்றல்கள் என்று நிறுவ முற்படும் கட்டுரையாளர் தலையைச் சுற்றி மூக்கைத் தொடும் முயற்சியை மேற்கொண்டு தோல்வியடைகிறார். நேரிடையான இலக்கியம் மற்றும் கல்வெட்டுச் சான்றுகளை விட்டு விட்டு அவர் சொன்னார், இவர் சொன்னார் என்ற போக்கிலேயே கட்டுரையை முடிக்கிறார். அவர் கூறுகிற ஆதாரங்கள் எதுவும் நேரிடையாக இருங்கோவேளிகளுடன் கோட்டை வேளாளர்களைத் தொடர்புபடுத்தவில்லை. வேளாளர், பிள்ளை என்ற சொற்களே சங்ககாலத்தில் பயன்படுத்தப்படவில்லை.

இந்தப் பிள்ளைகள் சமூகக் குழுவினர் கி.பி. 15 ஆம் நூற்றாண்டுக்குப் பின்வந்த தெலுங்கு வடுகர் ஆட்சி காலத்தில் ஏற்றம் பெற்றவர்கள். அந்தக் காலகட்டத்திலிருந்து சென்ற நூற்றாண்டு வரை தங்களுக்கான வரலாறுகளைக் கட்டிக் கொண்டவர்கள். அந்நியர்களின் ஆட்சிக்கு முன் ஆட்சி அதிகாரங்கள் பெற்றிருந்த மூத்த தமிழ்க்குடியும், தமிழ் மூவேந்தர் மரபினருமான மள்ளர், மல்லர், குடுமி, குடுமிச்சி, குடும்பர், குடும்பிச்சி எனும் தேவேந்திர குல வேளாளர் வம்சத்தாரின் வரலாற்றுப் பெருமைகளையும், பண்பாட்டுச் சிறப்புகளையும் மறைத்து அவைகளைத் தங்களுக்கு உரியதாகத் திருடிக் கொண்டவர்கள். சங்ககாலத்திற்கு முன்பிருந்து இன்றுவரை மாறாமல் பயன்படுத்தப்படும் இனக்குழுப் பெயர்கள் மள்ளர், குடுமி, குடுமிச்சி, குடும்பி, குடும்பியர், குடும்பிச்சி, குடும்பன் என்பன. ஆனால் சென்ற நூற்றாண்டில் வரலாற்றை எழுதிய பெரிய மனிதர்கள் இவர்களை முழுவதுமாக ஒழித்து இச்சொற்களுக்குப் புதிய பொருள்களை கூற முற்பட்டு தற்போது தோல்வியடைந்து நிற்கின்றனர். ஏழைகள் பேச்சு அம்பலமேறாது என்ற வகையில் மூவேந்தர் மரபினர் ஒடுக்கப்பட்டு வீழ்ந்து கிடக்கின்றனர்.

சங்ககாலத்து இருங்கோவேளிர்களும் பிற்காலத்து இருக்குவேளிர், இருங்கோளர், இளங்கோளர் ஆகிய பெயர்களும் ஒரே குழுவினரைக் குறிக்கும் பல சொற்கள் என ஆய்வாளர்கள் குறிக்கின்றனர்.

சங்ககால இருங்கோவேள்கள் நேரிடையாக மள்ளர் குலத்தவர் என்ற புறநானூறு மற்றும் அகநானூற்றுச் செய்யுள்களில் குறிப்பிடப்படுகின்றனர். இருங்கோ வேண்மான் என வருகிறது, இவர்கள் மற்ற நான்கு வேளிர்களான திதியன், எழினி, எருமையூரன், பொருநன் ஆகியோரும் இருபெரும் வேந்தர்களான சேரன் (மாந்தரஞ்சேரல் இரும்பொறை), செம்பியன் (சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்) ஆகியோரும் மள்ளர் குலத்தவர்கள்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை எதிர்த்து மள்ளர்கள் வந்ததாக புறநானூறு பாடல்கள் 77:9, 78:7, 79:5 ஆகியன கூறுகின்றன. அவர்களின் எண்ணிக்கை ஏழுபேர்கள் என புறநானூறு பாடல் 76:12 கூறுகிறது. அந்த ஏழு மள்ளர் குலத்தவர்களின் பெயர்களை அகநானூறு பாடல் 36 பட்டியலிடுகிறது. அது வருமாறு

கொய் சுவல் புரவிக் கொடித் தேர் செழியன்
ஆலங்கானத்து அகன் தலை சிவப்ப
**சேரன், செம்பியன்,** சினம் கெழு **திதியன்** . . வரி 15

போர் வல் யானைப் பொலம் பூண் **எழினி**
நார் அறி நறவின் **எருமையூரன்**
தேம் கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்
**இருங்கோ வேண்மான்,** இயல் தேர்ப் **பொருநன்** என்று
எழுவர் நல்வலம் அடங்க ஒரு பகம் . . வரி 20

முறை சொடு வெண்குடை அகப்படுத்து உரை செல
கொன்று களம் வேட்ட ஞான்றை

புதுக்கோட்டை மாவட்டம் கொடும்பாளூரை நடுவனாகக் கொண்டு சோழர்கள், பாண்டியர்களின் கீழ் அரசுப் பணி புரிந்த இடைக்கால இருங்கோளர், இருக்குவேளிர், இளங்கோவேளிர் என்போர் குடும்பர் குலத்தவர் எனக் கொங்கு நாட்டுக் கல்வெட்டு நேரிடையாகக் குறிப்பிடுகிறது.

தற்போதைய திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், கீரனூர் வாகீசுவரர் கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டு (கி.பி. 1079) இருங்கோளர் குடும்பர் குலத்தவர் என்பதை நேரிடையாகக் குறிப்பிடுகிறது. (தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் தொகுதி 5, எண் 278).

**கல்வெட்டு வாசகம்**

"ஸ்வஸ்திஸ்ரீ வீரராஜேந்திர தேவற்கு யாண்டு பத்தாவது பொங்கலூர்கா நாட்டு கீரனூர் **குடுமரில் (குடும்பரில்)** சுந்தன்

# தோகைமலை வட்டெழுத்தில் கல்வெட்டு

திரு. நடன. காசிநாதன்

சில ஆண்டுகளுக்கு முன்பு, திருச்சி மாவட்டம், தோகைமலை அருகே நாடகாப்பட்டி என்னும் ஊரில் உள்ள ஒருவரின் தோட்டத்தில் காணப்பெறும் நடுகல்லினை நிழற்படம் எடுத்து முனைவர் குடவாயில் பாலசுப்பிரமணியம் ஆய்வு செய்திருக்கிறார்.

அந்நடுகல் இருக்கும் தோட்டத்தின் உரிமையாளர் புதையல் பற்றிய செய்தி அந்நடுகல்லில் எழுதப்பெற்றிருப்பதாக நம்பி அந்நடுகல்லினை இரகசியமாகப் பாதுகாத்து வருகிறார். அவ்வெழுத்துக்களை மைப்படி எடுக்க அனுமதிக்கவில்லையாம்.

மேற்காணும் செய்திகளோடு, தம்மால் அக்கல்வெட்டின் வாசகத்தைப் படிக்க இயலவில்லையென்றும் தெரிவித்து அண்மையில் 30.6.05 - ல் அறிஞர் மகாதேவன் அவர்களுக்கு நடுகல்லின் நிழற்படங்களோடு ஒரு கடிதத்தையும் முனைவர் குடவாயில் பாலசுப்பிரமணியம் அனுப்பியிருக்கிறார்.

அறிஞர் மகாதேவன் அவர்கள் அக்கல்வெட்டினை,

1 அ(ஆ)மூர் தடகா(ளா?)
2 ன்று பால ரு தேவ
3 ரென்ற பேர் நின்று ஊ/பா
4 று ஏவ று பட்டான் 8
5 ள்ள தா வாண்டன்

என்று படித்துவிட்டு, என்னால் அரைகுறையாகப் படிக்க முடிந்த எழுத்துகள் (22.7.05) என்ற குறிப்பேடு எம்மிடம் காண்பித்து நீங்கள்தான் வட்டெழுத்துக் கல்வெட்டுக்களில் தேர்ந்தவர். ஆதலால் நீங்கள் இதனைப் படித்து யாதாவது ஒரு நூலில் வெளியிடுங்கள். மேலும் குடவாயில் பாலசுப்பிரமணியத்துக்கும் தெரிவியுங்கள் என்று கூறினார். அத்தோடு நில்லாது கீழ்க்காணுமாறு குடவாயில் பாலசுப்பிரமணியம் தமக்கனுப்பிய கடிதத்தின் கீழேயே எழுதியும் தந்தார்.

அறிஞர் நடனகாசிநாதன் பார்வைக்கு
இந்த அரியவட்டெழுத்துக்கல்
வெட்டைப் படித்து ஆவணம்
அல்லது வரலாற்றில் வெளியிடவும்.
குடவாயிலாருக்கு எழுதவும்.

11.1.06 அன்புடன்

**ஐ. மகாதேவன்**

என்று எழுதியும் தந்துவிட்டார். இது நடந்தது 11.1.06. அதாவது தமிழ் செம்மொழித் திட்டம் இரண்டாவது கலந்தாய்வரங்கத்தின் இரண்டாம் நாள். இதற்கு முன்பு டிசம்பர் 18-19, 2005 ல் நடைபெற்ற முதல் கலந்தாய்வரங்கத்தின் முதல்நாள் முனைவர் குடவாயில் பாலசுப்பிரமணியத்தின் முன்னிலையிலேயே, வட்டெழுத்துக் கல்வெட்டு தம்மிடம் முழுமையாகப் படிக்க இயலாமல் உள்ளது என்றும், அதை எமக்கு அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்தார். மேலும் பாலசுப்பிரமணியத்திடமும் அவர் தஞ்சை திரும்பியதும் உடன் அக்கல்வெட்டின் நிழற்படத்தை எமக்கு அனுப்பி வைக்கும்படியும் கூறினார். குடவாயிலாரும் ஓரிரு நாட்களில் தாம் அண்மையில் எழுதியுள்ள ஒரு நூலோடு இக்கல்வெட்டின் நிழற்படங்களையும் அனுப்பி வைப்பதாக உறுதியளித்தார். ஆனால் இன்றுவரை நூலையும் அனுப்பவில்லை. கல்வெட்டின் நிழற்படங்களையும் அனுப்பவில்லை.

அறிஞர் மகாதேவன் மற்றொரு மிகச்சிறந்த ஆலோசனையையும் எமக்கு அளித்துள்ளார். அதாவது வட்டெழுத்து நடுகற்களையெல்லாம் முழுமையாக நன்றாகப் படித்துத் தாம் பண்டைத் தமிழ்க் கல்வெட்டுக்களைப் படித்து வெளியிட்டிருப்பது போன்று ஒன்று வெளியிட வேண்டும் என்று எமது அடுத்த நூல் அதுவாகவே இருக்கும். அப்பேருள்ளத்துக்கு எம் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

11.1.06 இரவிலிருந்து இக்கல்வெட்டைப் படிப்பதில் ஒவ்வொரு நாளும் ஓரிரு மணி நேரம் செலவழித்தேன். 19.1.06 அன்று விடியற்காலை என்னால் இதை முழுமையாகப் படிக்க முடிந்தது. அவ்வாசகம் கீழ்வருமாறு.


---

*முன்பக்கத் தொடர்ச்சி . . .*

அதிசய சோழநாந குலோத்துங்க சோழ **இருங்கோளநேந்** இந்நாயநார் திருவாகீஸ்வரமுடையாற்கு நட்டுவப்புறத்துக்கு விட்ட நீர் நிலமாவதுக்கு நாந்கெல்லையாவது. எந்நிலத்து . . . குளத்தில் சேமத்தலை ஏரிக்கு மேற்கும் கீழ்மேல் பழூர் வாக்காலுக்கு தெற்கும் ஆக நெல்விதை இருகலமும் நட்டுவப்புறமாக இட்டுக் குடுத்தேன் சுந்தன் அதிசய சோழநாந குலோத்துங்க சோழ இருங்கோளநேந் சந்திராதித்தவற் இந்நிலம் இடநை மாராயறுக்கு பன்மாகேசுர ரகைஷ".

குடும்பர் என்பது குடுமர் என்று படிக்கப்பட்டுள்ளது. சங்ககால இருங்கோவேளிரும், இடைக்கால இருங்கோளர்களும் மள்ளர், குடும்பர் எனும் தேவேந்திர குல வேளாளர் வம்சத்தவர் என்பதை முதல் தரச் சான்றுகள் நேரிடையாகக் குறிப்பிடுகின்றன. நண்பர் இராமநாதன் அவர்கள் தன்னுடைய கருத்துக்களை மாற்றிக் கொள்வார் என நம்புவோமாக.

❀ ❀ ❀



1. (கோ)வூரு ஆண்ட கால
2. த்து ஊர் தந்தைபே
3. ரேத்தே ஓரே நினஙிநா
4. று தேவறு பட்டான் ப
5. ள்ளத் தூண்டன்.

(கோ)வூர் என்ற ஊரை ஊர்தந்தை பேரேத்து (பேரேறு) ஆண்ட காலத்து அவரோடு தேவரு என்பார் போரிட்ட பொழுது பள்ளத் தூண்டன் என்பான் இறந்த செய்தியைத் தெரிவிக்கிறது.

கல்வெட்டின் நிழற்படங்களின் உதவியால் மட்டுமே இதனைப் படித்துள்ளேன். கல்வெட்டின் மைப்படி கொண்டோ அல்லது நேரிலோ படித்தால் மேலும் சரியாகப் படிக்க முடிந்தாலும் முடியலாம். தற்போதைக்கு எம்மால் படிக்க முடிந்ததை மேலே தந்திருக்கிறேன். இக்கல்வெட்டின் காலம் கி.பி. 7 ஆம் நூற்றாண்டாகலாம். பல்லவ மன்னன் மகேந்திர வர்மன் காலத்திய வட்டெழுத்துக் கல்வெட்டுக்களோடு இக்கல்வெட்டின் எழுத்துக்கள் ஒற்றுமையுடையதாகக் காணப்படுகின்றன.

குறிப்பாக வேலூர் மாவட்டம், செங்கம் வட்டம் எருத்தனூரில் உள்ள மகேந்திரவர்மனின் 33 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் காணப்பெறும் து, க, ன, ண, அ, ள, ரு, ட ஆகிய எழுத்துக்களும் இக்கல்வெட்டில் காணப்பெறும் அவ்வெழுத்துக்களும் ஒன்றுபோலவே காணப்பெறுகின்றன.

இக்கல்வெட்டில் இரு சொற்கள் புதுமையாக உள்ளன. **பேரேத்தேஓரே** என்பது ஒன்று, மற்றொன்று **நினஙி** என்பதாகும். பேரேத்தேயோடே (பேரேற்றோடு) என்பதற்குப் பேரேத்தேஓரே என்று எழுதப்பட்டிருக்கிறது. பேரேத்தேஓரே என்பதைப் பேரேத்தியோரே என்றும் படிக்கலாம். பிணங்கி என்பதற்குப் பதிலாக நனஙி என்று காணப்படுகிறது. பிணங்கி என்பதற்குச் சண்டையிட்டு என்று பொருள். அந்தப் பொருளில்தான் இங்கு நினஙி என்ற சொல் ஆளப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. நினதம் என்றால் சத்தம், ஒலி என்றும் பொருள் காணப்படுகிறது. நினஙி என்பதற்குச் சத்தமிட்டு அல்லது ஒலியெழுப்பிப் போரிட்டதைக் குறிப்பதாகவும் இருக்கலாம்.

நினஙிநாரு என்று இடையினரே உகரம் எழுதுவதற்குப் பதிலாக வல்லின றகர உகரம் எழுதப்பட்டிருக்கிறது. அதைப் போன்றே தேவரு என்று எழுதுவதற்கு மாறாகத் தேவறு என்று எழுதப் பெற்றிருக்கிறது.

மேற்கூறப் பெற்றவற்றைப் பார்க்கையில் வேறு பகுதி மொழி பேசிய சிற்பி இந்நடுகல்லின் எழுத்துக்களைக் கல்லில் பொறித்தானோ என்ற ஐயம் ஏற்படுகிறது. பெரும்பாலும் அச்சிற்பி சேர நாட்டைச் சார்ந்தவனாக இருக்கலாம்.

**மள்ளர் மலர் குறிப்பு :** 4 & 5 வது வரிகளில் உள்ள பள்ளத் தூண்டன் என்ற சொல் பள்ளத்தில் அதாவது நீர்நிலமான வயல்களிடையே வசிக்கின்ற போர் மறவன் தூண்டன் என்று பொருள்படும். ஏனென்றால் 7 ஆம் நூற்றாண்டில் பள்ளன் என்று ஒரு குலப்பெயர் தோன்றவில்லை. பின்னாளில் தான் மள்ளர் என்ற பெயர் வயல், கழனிகளுடன் தொடர்புப்படுத்தி பள்ளர் என்று மாறியது.

தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் தொகுதி 26, எண் 357 இல் குறிப்பிடப்படும் கல்வெட்டில் (கி.பி.1089-90) "பெரும்பூதூரேற் **பள்ளன் பெருவழிக்கும்** அம்பலவனேரிக்குத் தெற்கு நாற் வேஎல்லையுள்ளு மகபட்ட நிலத்திலே ஏரிகட்டி பயிர் செய்து" என்பதில் பள்ளன் பெருவழி என்பது நீர்நிலமான நஞ்சை வயல்களினூடே செல்லும் பெரும்பாதை என்றே பொருள்படும். பள்ளத்தூண்டன் என்பது மருதநிலத்துப் போர்மறவன் தூண்டன் என்று பொருள்படும். ❁ ❁ ❁

## அ.இ.அ.தி.மு.க. கூட்டணி

மே 2006 - இல் நடைபெற உள்ள தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தலில் திருமாவளவன் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கமும், ம.தி.மு.க. வும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

விடுதலைச் சிறுத்தைகளுக்கு 9 தொகுதிகளும் ம.தி.மு.க. வுக்கு 35 இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

# தொல்லியல் துறையின் மழுப்பல் பதில்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியிட்ட **கோயம்புத்தூர் மாவட்டத் தொல்லியல் கையேட்டில்** உள்ள அப்பட்டமான தவறுகளைச் சுட்டிக்காட்டி கல்வெட்டுகள் மற்றும் இலக்கியச் சான்றுகளுடன் மள்ளர் மலர் ஆகஸ்டு, செப்டெம்பர், அக்டோபர் 2006 ஆகிய மூன்று இதழ்களில் விமர்சனம் செய்யப்பட்டது. 4.8.2005 மற்றும் 13.9.2005 ஆகிய நாட்களில் விளக்கம் கேட்டு கடிதங்களும் எழுதப்பட்டன. துறை சார்ந்த அரசு செயலருக்கும் விளக்கம் கேட்டு 13.8.2005 அன்று கடிதம் எழுதப்பட்டது. எந்தவிதமான விளக்கமும் பதிலும் வரவில்லை.

ஆகவே 3.2.2006 தேதியிட்டு நீதிமன்றத்தில் வழக்கிடுவோம் என்ற அறிவிப்பை நமக்காக வழக்கறிஞர் திரு. இரா. முத்துமணி தேவேந்திரர் அவர்களால் அரசு தலைமைச் செயலருக்கும், தொல்லியல் துறை சிறப்பு ஆணையருக்கும் அனுப்பப்பட்டன. அதைப் பெற்றுக் கொண்ட சிறப்பு ஆணையர் வழக்கறிஞர் அறிவிப்பு வந்ததைக் காட்டிக் கொள்ளாமல் 30.1.2006 என்று முன்தேதியிட்டு 8.2.2006 அன்று அவர் அனுப்பிய கடிதம் எமக்கு 10.2.2006 அன்று கிடைத்தது. அதனுடைய நகல் (சீராக்ஸ்) இங்கே தரப்பட்டுள்ளது.

தொல்லியல் துறை

அனுப்புநர்

திரு தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர்,
தொல்லியல் துறை,
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்ஸ் சாலை, எழும்பூர்,
சென்னை – 600 008
Email ID: tnarch@tn.nic.in

பெறுநர்

பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தர்,
தலைவர்,
தமிழர் பண்பாடு சமூக ஆய்வு மன்றம்
10/2, நால்வர் நகர்,
பாரதியார் பல்கலைக் கழகம் அஞ்சல்,
கோயமுத்தூர் – 641 046

ந.க.எண்.உ1/7383/2005/நாள் 30.1.2006

அன்புடையீர்,

தங்களுடைய "மள்ளர் மலர்" இதழ்களும் கடிதங்களும் கிடைக்கப் பெற்றன. அவைகளில் "கோயமுத்தூர் மாவட்டத் தொல்லியல் கையேடு" குறித்துத் தாங்கள் எழுதியுள்ள பாராட்டுரையும், விமர்சனமும் கவனத்தில் கொள்ளப்படுகிறது.

பொதுவாக இத்துறை, தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு மாவட்டம் குறித்தும் ஒரு தொல்லியல் கையேட்டினை வெளியிட்டு வருகிறது. இதுவரை ஆறு மாவட்டங்களின் தொல்லியல் கையேடுகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்ட வரலாற்றிலும் தொல்லியல் செய்திகளைப் பொதுமக்கள் அறியும் வண்ணம் ஏற்கனவே தொல்லியல் ஆய்வில் ஈடுபட்டு வரும் ஆய்வாளர்களுடைய கருத்துகளையும், முடிவுகளையும் தொகுத்து அளிப்பதே இக்கையேடுகளின் நோக்கமாகும். அந்த அடிப்படையில் காவிதி, குடும்பர் ஆகிய சொற்கள் பற்றி கோயமுத்தூர் மாவட்டக் கையேட்டில் விளக்கங்கள் தரப்பட்டன. இச்சொற்கள் அரசிற்கு வரி வாங்கித்தரும் குடித்தலைவர்களைக் குறிப்பிடும். இச்சொற்கள் குறித்த ஆய்வுகள், பலதிறப்பட்ட கருத்துக்கள் தொகுத்துச் சொல்லப்பட்டுள்ளன. தங்களுடைய கருத்தும் ஏற்புடையதாக உள்ளது.

இதனை இத்துறை கவனத்தில் கொண்டு, மறுபதிப்பு வெளியிடும் போது பரிசீலித்துத் தங்கள் கருத்துக்களும் சேர்த்துக் கொள்ளப்படும் என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அவர்களுடைய அறியாமையைச் சுட்டிக்காட்டியதையும், தவறுகளையும் திரிபுகளையும் சுட்டிக்காட்டியதையும், கேலிகளையும் பாராட்டுதல்கள் என்று பதிவு செய்யும் திரிபுவாதிகள்.

தங்களுடைய கருத்தும் ஏற்புடையதாக உள்ளது என்று கூறும் சிறப்பு ஆணையர் அதற்கு நேர்மாறான கருத்துக்கள் தவறானவை என்பதைக் குறிப்பிடவில்லை. உம் விகுதி சேர்த்து அவைகளும் சரியானவை தான் என்பது போன்ற தோற்றத்தை உண்டாக்குகிறார். பிறகு தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை சார்பாக வெளியிடப்பட்ட தவறான கருத்துக்கள் அரசினுடையதா அல்லது வேறு யாருடையது என்று நூலிலும் பதிவு செய்யப்படவில்லை. இந்தக் கடிதத்திலும் பதிவு செய்யப்படவில்லை.

நாங்கள் கொடுத்துள்ள வழக்கறிஞர் அறிவிப்புக்காவது விளக்கமான பதிலைச் சிறப்பு ஆணையர் அவர்கள் எழுதுவார் என்று நம்புகிறோம்.

❊ ❊ ❊

# தேவேந்திர மக்களின் குலதெய்வ வழிபாட்டு மரபுகள்

ச. கலைச்செல்வன்,
முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழ்த்துறை), பாரதியார் பல்கலைக்கழகம், கோவை - 46.

## முன்னுரை

கோவை மாவட்டம் உடுமலை வட்டத்தில் உள்ள பள்ளபாளையம் கிராமத்தில் வாழ்ந்து வரும் தேவேந்திர இன மக்களின் குல தெய்வமான கருப்பராயன் மற்றும் வீரமாத்தி ஆகிய தெய்வங்களின் வழிபாட்டு மரபுகளை ஆய்ந்து விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

## குல தெய்வம் - வரையறை

கூட்டுக் குடும்பங்கள் பல சேர்ந்து அவற்றிற்கான ஒரு தெய்வத்தை உருவாக்கிக் கொண்டன. இக்குடும்பங்கள் ஒன்றிணைந்து ஆண்டிற்கொருமுறை (அல்லது) குறிப்பிட்ட சில நாட்களில் இத்தெய்வத்திற்குப் படையலிட்டுப் பூசைகள் செய்து பலியிட்டுச் சடங்குகளைச் செய்வர். மேற்கண்ட முறையில பல குடும்பங்களுக்குரிய (அல்லது) பல குடும்பங்கள் ஒன்றிணைந்தே சாதிக்குரிய தெய்வங்கள் குல தெய்வமாக வணங்கப்படுகின்றன.[1]

இக்குல தெய்வ வழிபாடானது நாள்பட நாள்பட ஊர்த்தெய்வ வழிபாடாகவும் பின்னர் அனைவரும் வணங்கத்தக்க பொதுத் தெய்வ வழிபாடாகவும் வளர்ச்சி பெறுகிறது. பள்ளபாளையத்தில் வாழ்ந்து வரும் தேவேந்திர இன மக்கள் பல தெய்வங்களை வணங்குகின்றனர் என்றாலும் தங்களின் குல தெய்வமாகக் கொண்டு வழிபடுவது கருப்பராயன் மற்றும் வீரமாத்தி தெய்வங்களைத்தான் என்பதை அறியலாம்.

ஒரு தெய்வத்தினை வணங்கக் கூடியவர்கள் எல்லோரும் ஒரே பங்காளிகள் (ஒரு கால்வழி உறவு முறையினர்) என்று குறிப்பிடப்படுகின்றனர். மற்ற தெய்வத்தினை வணங்குபவர்கள் தனிக் குழுவினராகப் (பங்காளிகள்) பிரித்தறியப்படுகின்றனர்.[2] இந்த வகையில் பள்ளபாளையம் என்ற ஊரில் வசிக்கும் தேவேந்திர இன மக்களுள் வெடிக்காரங் கூட்டம், வெங்கிட்டாங் கூட்டம் ஆகிய இரண்டு கூட்டத்தார்க்கும் கருப்பராயன் மற்றும் வீரமாத்தி என்ற தெய்வங்கள் குல தெய்வமாக விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும். முன்பு வெடிக்காரங் கூட்டத்திற்கு கருப்பராயன் குல தெய்வமாக விளங்கியது. வெங்கிட்டான் கூட்டத்திற்கு வீரமாத்தி குல தெய்வமாக விளங்கியது. பின்பு கருப்பராயனுக்கு நோன்பு சாட்டும் போதே வீரமாத்திக்கும் வழிபாடு நடைபெறுகிறது. இவ்விரண்டு கூட்டத்தினர்களும் இணைந்து திருவிழாவில் கலந்து கொள்கின்றனர். தனித்தனி வழிபாடு இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## தெய்வம் பற்றிய தோற்றக் கதை

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னால் ஸ்ரீவில்லிபுத்தூரில் வெங்கிட்டான், வெடிக்காரன் என்ற இரண்டு பேரும் (மாமன், மச்சினன்) தன் குடும்பத்தினருடன் பஞ்சம் பிழைப்பதற்காக மேற்க்கு சீமைக்கு வருகின்றனர். அவ்வாறு அவர்கள் வரும்போது தங்களுடன் தட்டுமுட்டுச் சாமான்களுடன் ஒரு கூடையும் எடுத்து வருகின்றனர். வரும் வழியில் பல இடங்களில் தங்கி ஓய்வு எடுத்துக் கொண்டு மீண்டும் தங்கள் பயணத்தினைத் தொடர்கின்றனர். இவ்வாறு அவர்கள் வரும்போது ஓரிடத்தில் பசி எடுக்கவே அங்கு தங்கி அவர்கள் கொண்டு வந்த உணவினை சாப்பிடுவதற்காக கூடையை இறக்கி கூடையைப் பார்த்தபோது அக்கூடையினுள் மூன்று வெண்கக்கல் இருப்பதைப் பார்த்து, என்னடா கூடைக்குள் வெண்கக்கல் கிடக்கிறதே என்று சொல்லி அந்த வெண்கக்கல்லை எடுத்து எறிந்துவிட்டு அவ்விடத்தில் அவர்கள் கொண்டு வந்த உணவினை சாப்பிட்டுவிட்டு சிறிதுநேரம் இளைப்பாறி மீண்டும் பயணத்தினை தொடர்கின்றனர். திரும்பவும் ஒரு குறிப்பிட்ட தூரத்தினைக் கடந்த பின்பு சிறிது ஓய்வு எடுப்பதற்காக அங்கு தங்குகின்றனர். அப்போது மீண்டும் கூடைக்குள் அந்த மூன்று வெண்கக்கல் இருப்பதைப் பார்த்து, என்னடா மறுபடியும் இந்த கற்கள் கூடைக்குள் கிடக்கிறதே. முன்பு கூடைக்குள் இருந்த கற்களை முன்பு தங்கிய இடத்திலேயே எறிந்துவிட்டு வந்துட்டோமே திரும்பவும் கூடைக்குள் கல் கிடக்கிறதே என்று அந்த கற்களை மீண்டும் எடுத்து எறிந்துவிட்டு அந்த இடத்தில் நேரம் ஆகிவிட்டதால் இந்த இரவு இங்கேயே தங்கி ஓய்வு எடுத்துவிட்டு மறுநாள் காலை புறப்படலாம் என்று கருதி அங்கு தங்குகின்றனர். அன்று இரவு அவர்கள் கனவில் இறைவன் தோன்றி என்னைத் தூக்கி எறியாதீங்கப்பா, நீங்களே போகும்போது எனக்கு இங்கு என்ன வேலை? நானும் உங்களுக்கு பாதுகாப்பா உங்களோடே வர்றேன். நான்தான் ஸ்ரீவில்லிபுத்தூரில் கரிசல்குளம் என்ற ஊரில் நீங்கள் வழிபட்டு வந்த தெய்வம் என்று கூறியவுடன் அந்தக் கற்களை மீண்டும் எடுத்து கூடைக்குள் வைத்துக் கொண்டு பயணத்தினை தொடர்கின்றனர். அவ்வாறு வந்தவர்கள் கோவை மாவட்டத்தில் உடுமலைக்கு அருகில் உள்ள பள்ளபாளையம் என்ற ஊருக்கு வந்து சேர்கின்றனர். அப்போது அந்த ஊர் முள்ளுக்காடாக இருந்துள்ளது. அந்த இடத்தினை அவர்கள் சுத்தம் செய்து தாங்கள் கொண்டு வந்த சாமியை எங்கு வைத்து வழிபடுவது என்று கேட்கும்போது கருப்பராயன் கனவில் தோன்றி எனக்கு கொட்டுச்சத்தம் ஆகாது. நான் ஊரைவிட்டுத் தள்ளி சுற்றிலும் தோட்டங்கள் சூழ குளத்துக்கரையில் உள்ள மாவுலிங்க மரத்தினடியில் ஸ்ரீவில்லிபுத்தூர் கரிசல்குளம் என்ற ஊரிலிருந்து கொண்டுவந்த புடிமண்ணை வைத்து அதன்மேல் அவர்கள் கூடையில் கொண்டுவந்த மூன்று வெண்கக்கல்லில் ஒன்றினை அங்கு வைத்து வழிபட்டு வரலாயினர். பெண் தெய்வமான வீரமாத்தி நான் ஊருக்குள்ளேயே இருந்துக்கறேன் என்று கூற, அவர்கள் குடில் அமைத்து வாழ்ந்து வரும் இடத்திலேயே கோவில் கட்டி வழிபடுகின்றனர். உக்கிரகாளியம்மன் என்ற

பெண் தெய்வம் இங்கெல்லாம் எனக்கு ஆகாது என்று கூற ஊரைவிட்டுத் தள்ளி ஊரின் மேற்கு திசையில் கோவில் அமைத்து வழிபட்டு வருகின்றனர்.[3]

### கோவில் அமைவிடம்

உடுமலையிலிருந்து தெற்கு திருமூர்த்தி மலை செல்லும் பாதையில் சுமார் 8 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூரிலிருந்து வடக்கு திசையில் சுமார் 1/2 கி.மீ. தொலைவில் சுற்றிலும் தோட்டங்கள் சூழ கண்மாய்க்கு அருகே தென்புறத்தில் 1 ஏக்கர் நிலப் பரப்பில் இக்கோவில் அமைந்துள்ளது. இக்கோவிலில் கருப்பராயனுக்கு துணைத் தெய்வங்களாக கன்னிமார், முனீஸ்வரன் (காவல் தெய்வம்), மொண்டி மலசன், திண்டுக்கல்லான் என்ற நான்கு தெய்வங்கள் அமைந்துள்ளன. கோவிலின் முன்புறத்தில் கருப்பராய சுவாமிக்கு எதிராக வேல்கள் நடப்பட்டுள்ளன. கோவில் செங்கற்களால் கட்டப்பட்டு கோவிலின் மேற்புறம் ஓடுகளால் வேயப்பட்டுள்ளது. ஊரிலிருந்து கோவில் வரை 10 அடிக்கு நடைபாதை அமைக்கப்பட்டு இருபுறமும் கம்பி வேலிகள் போடப்பட்டுள்ளன.

### வழிபாட்டு முறைகள்

ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதம் முதல் செவ்வாய்க்கிழமை நோன்பு சாட்டப்படுகிறது. 15 நாள் சாட்டு சாட்டப்படுகிறது. நோன்பு சாட்டுவதற்கு முன்பே சித்திரை முதல் வாரத்தில் திங்கட்கிழமை கூட்டம்போட்டு தீர்த்தம் எடுத்து வரச் செல்கின்றனர். திருமூர்த்தி மலைக்குச் சென்று தீர்த்தம் எடுத்துவந்து அதனை சாமிக்கு விட்டு வழிபட்ட பின்னர் தான் நோன்பு சாட்டுகிறார்கள். கருப்பராயனுக்கு தீர்த்தம் எடுக்கும்போதே வீரமாத்திக்கும் தீர்த்தம் எடுத்து வரப்படுகிறது. இரண்டு தெய்வங்களுக்கும் ஒரே நேரத்தில் நோன்பு சாட்டப்படுகிறது. வீரமாத்தி கோவிலில் குறிகேட்டுத்தான் நோன்பு சாட்டுகிறார்கள். சாமியழைத்து, பச்சரிசி போட்டு, தேங்காய், பழம் உடைத்து வைத்து, பால், பழம் வைத்து வழிபாடு செய்து சாமியழைத்து கேட்கும்போது சாமி வந்தவர் நோன்பு கொண்டாடுங்கள் என்று கூறினால் மட்டும் நோன்பு சாட்டப்படுகிறது. பச்சரிசியும், சர்க்கரையும் கலந்து படையலாக படைத்து வழிபடுவதால் இதற்கு "பச்சை போடுதல்" என்று குறிப்பிடுகின்றனர்.[4]

நோன்பு சாட்டியதும் நாட்டாண்மைக்காரர், பெரியதனக்காரர், ஓடும்பிள்ளை, பூசாரி நால்வரும் முக்கியமானவர்கள். நாட்டாண்மைக்காரருக்கு பரிவட்டம் கட்டப்படுகிறது. பின்னர் நாட்டாண்மைக்காரர், ஓடும்பிள்ளை, பெரியதனக்காரர், பூசாரி ஆகிய நால்வருக்கும் (வெற்றிலை, பாக்கு காப்பு வைத்து) கங்கணம் கட்டப்படுகிறது. இவர்கள் நோன்பு முடியும் வரை கோவிலிலேயே இருப்பர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். செவ்வாய், புதன், வியாழன் என்ற மூன்று நாட்களிலும் நோன்பு மிகவும் விமர்சையாக நடைபெறுகிறது. செவ்வாய்கிழமை காலை உருவாரம் எடுத்தல் நடைபெறுகிறது. மண்ணுடையார் வீட்டில் செய்யப்பட்ட கருப்பராயன் மற்றும் குதிரை சிலைகளை மேளதாளத்துடன் சென்று சப்பரத்தில் வைத்துக் கொண்டு ஊருக்குள் விளையாடிக் கொண்டு வந்து வீரமாத்தி கோவிலுக்கு வருவர். அங்கு வழிபாடு செய்த பின்னர் ஊருக்குப் பொதுவாக உள்ள விநாயகர் கோவிலுக்கு எடுத்து வந்து வழிபாடு செய்த பின்னர் தேவேந்திர இன மக்கள் வசிக்கும் தெருவின் வழியாக மேளதாளத்துடன் கோவிலுக்கு எடுத்து வருவர். உருவாரம் எடுக்கும்போது / கிடாய், நுழைவாயிலில் / கிடாய், கருவண்டராயன் (வரும் வழியில் உள்ள காவல் தெய்வம்) அதற்கு / கிடாய், கோவிலுக்கு வந்தவுடன் வேல்களுக்கு முன்னால் தீர்த்தம் தெளித்து துலுக்கு கேட்டு அங்கு ஒரு கிடாய் வெட்டுகிறார்கள். அதற்கு "சக்திக் கிடாய்" என்று பெயர். இவ்வாறு கிடாய் வெட்டி பொங்கல் வைத்து விருந்து சமைத்து அதனைப் படைத்து வழிபடுகின்றனர்.

கடவுளர்க்கும் இல்லுறை தெய்வங்கட்கும் பலி கொடுத்தமையைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

"பலிபெறு கடவுட்பேணி கலிசிறந்து"

"உயிர்ப்பலி பெறூஉம் உருகெரு தெய்வம்"

மேலைச் சான்றுகளான கடவுளர்க்கு உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கம் சங்ககாலத்தே நிலவியிருந்தமை புலனாகும்.[5]

உருவாரம் எடுத்துவரும் மண்ணுடையார்க்கு தட்சணையாகக் கிடாய் ஒன்றும், உருவாரத்திற்கான தொகை, கோடித்துணி என்னும் பட்டு வேட்டி, பட்டுச்சட்டை, தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு ஆகியவை வழங்கப்படுகிறது.

### பொங்கல் அழைப்பு

உருவாரம் கொண்டு வந்து வைத்து வழிபட்ட பின்பு பொங்கல் அழைப்பு நடைபெறுகிறது. சாமிக்கு பொங்கல் வைப்பதற்காக பெரியதனக்காரர் மேளதாளத்துடன் மண்ணுடையார் வீட்டிற்குச் சென்று புதிய மண்மொடா, மூடுதட்டம், கரண்டி (தொட்டாங்குச்சியால் செய்தது) அவற்றை மேளதாளத்துடன் கோவிலுக்கு எடுத்துவந்து அம்மொடாவில் பொங்கல் வைத்தல் நடைபெறுகிறது. இதற்கு "மொடாப் பொங்கல்" அல்லது "ஊர்ப் பொங்கல்" என்று வழங்குகின்றனர்.[6]

புதன்கிழமை காலை மாவிளக்கு எடுக்கப்படுகிறது. இவை தேவேந்திர இன மக்களின் வீடுகளில் இருந்து மேளதாளத்துடன் மாவிளக்கு புறப்பட்டுக் கோவிலை அடைந்து அங்கு வழிபட்ட பின்பு அவரவர் இல்லங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

மாவிளக்கு வழிபாடு முடிந்தவுடன் பூவோடு எடுக்கப்படுகிறது. பூவோட்டினை தண்ணீர் கிணர் என்ற தேவேந்திரர் மக்களுக்குப் பாத்தியப்பட்ட இடத்தில் வளர்த்தி கோவிலுக்கு எடுத்து வந்து கோவிலைச் சுற்றி வழிபாடு செய்த பின்னர் கோவிலின் ஓரிடத்தில் வைத்து விடுகின்றனர். மறுநாள் வியாழக்கிழமை மஞ்சள் நீர் விளையாடுதல் நடைபெறுகிறது. சாமியை ஊருக்குள் எடுத்துவந்து மஞ்சள் நீர் விளையாடி இறுதியாகச் சாமி கோவிலை அடைகிறது. இத்துடன் நோன்பு முடிவுக்கு வருகிறது.

நோன்பு முடிந்தவுடன் அடுத்த செவ்வாய்கிழமை முனீஸ்வரனுக்கு மட்டும் சிறப்புப் படையல்

படைத்து வழிபடுகின்றனர். அதில் கருப்பு கோழி (அடைகோழி) முட்டை அவற்றைச் சமைத்து படையலாகப் படைத்து நடுநிசி இரவு 1 மணிக்கு படப்புப் போட்டு வழிபடுகின்றனர். பின்னர் மீதமுள்ள உணவுப் பண்டங்களை குழிதோண்டிப் புதைத்து விடுகின்றனர். இவ்வழிபாட்டில் பெண்கள் இடம் பெறுவதில்லை. ஆண்கள் மட்டுமே பங்கு பெறுகின்றனர். கருப்பராயனுக்கு வழிபாடு நடைபெறும்போதே துணை தெய்வங்களான மொண்டி மலசன், திண்டுக்கல்லான், முனீஸ்வரன் போன்ற தெய்வங்களுக்கும் வழிபாடு நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

**படையல்கள் படைத்தல்**

இத்தெய்வத்திற்கு விழா நடைபெறும் போது ஐந்து படையல்கள் போடுகின்றனர். கன்னிமார், முனீஸ்வரன் (காவல் தெய்வம்), முனீஸ்வரன் விலங்கு போட்டு கட்டித்தான் வைத்திருப்பார்கள். கண்திறக்க மாட்டார்கள். கண் திறந்தால் மோசமாக குணாதிசயத்தினைக் காட்டும் என்பதால் விலங்கிட்டு கட்டி வைத்திருக்கும் நிலையில் தான் சிலையும் அமைக்கப் பட்டுள்ளது. திண்டுக்கல்லான் என்ற தெய்வத்திற்கு தேங்காய், பழம் உடைத்து வைத்து வழிபடுகின்றனர். திண்டுக்கல்லான் என்பது உருண்டை வடிவில் மூன்று கற்களை உடையது. அடுத்து உள்ளது மொண்டி மலசன் அதற்கும் படையல்கள் படைக்கப்பட்டு வழிபடப்படுகிறது. படையல்களில் தேங்காய், பழம் படைத்து பொங்கல் படைத்தும், அபிஷேகம் படைத்தும் வழிபடுகின்றனர். பச்சரிசி மாவினால் மாவு இடித்து படையல் போடுகின்றனர். நவதானியங்களையும் போட்டு வழிபடுகின்றனர். அசைவமாக இருந்தால் அவற்றையும் படைக்கின்றனர். கிடாய்க்கறி, மீன், முட்டை, சாராயம், கஞ்சா, சுருட்டு ஆகியவற்றைப் படையலில் படைத்து வழிபடுகின்றனர். முனீஸ்வரனுக்கு சிறப்புப் படையலாகக் கருங்கோழி (அடைக்கோழி) முட்டை அவற்றைச் சமைத்து படையலாகப் படைத்து நடுநிசி 1 மணிக்கு வழிபட்ட பின்பு மீதமுள்ள உணவுப் பொருட்களைக் குழிதோண்டிப் புதைத்து விடுகின்றனர். சைவ உணவில் பூசணிக்காய் முக்கியமாகப் படைக்கப்பட்டு வழிபடப்படுகிறது.

**வேண்டுதல்கள்**

குழந்தை இல்லாதவர்கள் குழந்தை வரம் வேண்டி வேண்டுதல்கள் செய்கின்றனர். "தவறு புள்ளை" என்று வழங்கும் தவழ்ந்து வரும் படியாக குழந்தையின் உருவத்தினை மண்ணினால் செய்து வைத்து வழிபடுகின்றனர்.[7]

வேளாண்மை சரியாக இல்லாமல் இருந்தால் எலி கடி போன்ற பிரச்சனைகள் ஏற்பட்டால் எலி வாகனம் போன்றவற்றை செய்து வழிபடுகின்றனர்.

குழந்தை பிறந்தவுடன் சாமியின் பெயரை வைத்து வழிபடும் பழக்கம் இருந்து வருகிறது. கருப்புசாமி, காளிமுத்து என்று பெயரிடுதல் உண்டு. இப்போது நாகரீகமான முறையில் பெயரிடுவது நடைமுறையில் இருந்தாலும் முதல் எழுத்து தெய்வத்தைக் குறிக்கும் வகையில் 'க' என்ற முதல் எழுத்தினை மையமாகக் கொண்டு தொடங்கும் வகையில் பெயரிடுவது வழக்கமாக இருந்து வருகிறது. காயத்திரி, கயல்விழி, கவிக்குமார், கீதஞ்சலி, காவேரி போன்ற பெயர்கள் ஆண் பெண் இருபாலர்க்கும் வழங்கப்படுகின்றன.[8]

சாமி ஊர்வலம் வரும்போது பழம் சூறையிடுகின்றனர். தங்களுக்கு ஏதாவது நல்ல காரியம் ஏற்பட்டால் பழம் சூறையிடுவது வழக்கமாக நிகழ்ந்து வரும் நிகழ்ச்சியாகும். சிலர் நீர்மோர், நீர், பாணக்கம் என்ற நீராகாரம் போன்றவற்றை அளிப்பர். சிலர் தங்களது உடம்பு சரியானால் வேல் அடித்து வைப்பதாக வேண்டிக் கொண்டு உடம்பு சரியானதும் ஆசாரியிடம் சொல்லி வேல் அடித்து வைப்பது உண்டு. சிலர் குழந்தை பிறந்ததும் வேல் அடித்து வைப்பதும் உண்டு. இவ்வாறு வேண்டுதல்கள் நிகழ்த்தப்படுகின்றன.

**பூ கேட்டல்**

இக்கோவிலில் சிரசுப் பூ மற்றும் கட்டுப் பூ கேட்கும் வழக்கம் உள்ளது. சிவப்பு மற்றும் வெள்ளை அரளிப் பூக்களை கொண்டு வந்து சாமியின் சிரசில் வைத்து கேட்கும்போது கல்யாணம் நடப்பதாக இருந்தால் வெள்ளைப் பூவும், இல்லை என்றால் சிவப்பு பூவும் கிடைக்கும். இதை வைத்து அவர்கள் முடிவெடுக் கின்றனர். நோய் சரியாவதற்குச் சிவப்பு பூ கேட்கப் படுகிறது. இவ்வாறு பூக்கேட்டல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

**வரி வசூலித்தல்**

சித்திரை மாதம் நோன்பு சாட்டப்படுகிறது. அந்த மாதம் இப்பகுதி வறட்சியான காலம் (கோடை காலம்) நிலவுவதால் பொருளாதாரப் பிரச்சனை ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அவர்கள் மாதமாதம் வீட்டுக்கு 25 ரூபாய் என சந்தா (வரி) வசூலித்து அதனை ஊரில் உள்ள தேவேந்திர இன மக்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுக்கிறார்கள் (அவர்களுக்கு தேவை ஏற்பட்டால் மட்டுமே). அதனை மாதமாதம் வீரமாத்தி கோவிலில் அமாவாசையன்று நடைபெறும் கூட்டத்தில் தான்பெற்ற பணத்திற்கான வட்டியைச் செலுத்தி வருவர்.[9] இவை கோவிலின் வளர்ச்சிக்கு இப்பணம் உதவுகிறது. நோன்பு சாட்டுவதற்கு 1 மாதத்திற்கு முன்பாக அனைத்து பணத்தினையும் கட்டி விடுவார்கள். பின்பு வரவு செலவு கணக்குப் பார்த்து நோன்பு சாட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்கின்றனர். இவ்வாறு வரி வசூலித்தல் நடைபெறுகிறது.

**கலை நிகழ்ச்சிகள்**

விழாவில் மக்களுக்குச் சோர்வு ஏற்படா வண்ணம் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. கரகாட்டம், திரைப்படம் என்று மட்டும் அமையாமல் தேவேந்திர இளைஞர்கள் பலவிதமாக வேடமிட்டு ஆடல், பாடல் போன்ற கலை நிகழ்ச்சிகளிலும் பங்கு பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**முடிவுரை**

தேவேந்திர மக்களிடம் காணப்படும் குல தெய்வ வழிபாடானது நோன்பு சாட்டுதலில் தொடக்கம் பெற்று சடங்குகள் செய்தல், சாமியழைத்தல், பூவோடு எடுத்தல்

# செங்கோட்டுப் பள்ளு



சென்ற இதழ் தொடர்ச்சி:

சதாசிவக் குடும்பனார் தனது மூத்த மனைவி சிவகாமி மள்ளத்தியாரிடம் கெஞ்சி, பண்ணையாரிடம் சொல்லித் தன்னைச் சிறை மீட்க வேண்டுகிறார். முதலில் மறுத்த சிவகாமி பின்பு குடும்பனார் கூறியவற்றால் திருப்தி அடைந்து சரி என்கிறார். பண்ணைக்காரனிடம் சென்று தான் குடும்பனாரைப் பற்றிக் கோபத்தால் பொய்யாகக் குறை கூறியதாகச் சொல்கிறார். பின்பு பண்ணைக்காரன் குடும்பனாரை சிறையிலிருந்து விடுவிக்கிறான்.

**சக்களத்தி வந்து மீட்பாள் எனல்**

முடுகு

பள்ளா:-

சிக்கிக் கொண்டுமு ழித்தமே லல்லோ
தெரியு மென்பதுன் பாலினிற் கண்டேன்
கைக்குள் மோதிரம் உண்டோஅ ரண்மனை
காரி யங்கண்டு பேசிடப் போமோ
தொக்கு நாக்குள்ள சக்களத் திவந்து
சொல்லி மீட்பாள்; என் னாலில்லை; வட்டியில்
வைக்கும் வாய்நிலை யுண்டோ அன் னேருள்ள
வார்த்தை நம்பிட லாமோஎன் பள்ளா 655

**சதாசிவக் குடும்பனார் சிவகாமியிடம் சிறைமீட்கச் சொல்லல்**

தணிவு

அடி:-

பலவி தங்கள்ப ருவஞ்சொல் லாதே -- நான்
பட்ட பாவி யினிஅறி யேனோ
தலைமை நீஇளை யாள்உன் மீளிதம்
சரிசொன் னால்அவள் தன்னைஉ தைப்பேன்
வலது கைப்பிடி சத்தியஞ் செய்வேன் -- நீ
வார்த்த கஞ்சிகு டித்துஇ ருப்பேன்
கலக மினெஞ்செய் யாதே நயினாரைக்
கண்டு கால்குட்டைக் கட்டழிப் பாயே 656

**சிவகாமியின் தயக்கம்**

முடுகு

நல்ல தாகட்டும் என்றுந யினாரை
நாடியேசென்று காலில் விழுந்து
சொல்ல வேண்டிய வார்த்தைகள் சொல்லி
தொழுவை நீக்கிவி டுவித்த போது
கல்லி செய்தோடங் கழிந்தால் ஓடக்
காரர்க் குச்சொட்டு வைப்பது போலும்
மெல்லி யோடுற வாடிக் கவுத்துவ
மென்ன செய்வாயோ குன்னுகப் பள்ளா 657

**சதாசிவக் குடும்பனார் சிவகாமிக்கு உறுதி கூறல்**

தணிவு

முட்டுப் பட்டுங்கு னியாமல் போனால்
முழுதும் போக வரயிடி யாதோ
கெட்ட பின்புத்தி தான்வரு காதா
கெஞ்சி யும்பின்பு வஞ்சனை செய்தால்
கட்டு மோஅரர்க் கொப்பணை யாமோ
கருமஞ் சூழ்ந்துவி ருமைகொள் ளாதோ
குட்டு மார்க்கந் தவறிடேன் இன்னம்
கோலஞ் செய்துகொ டுமைசெய் யாதே 658

**சிவகாமியிடம் குடும்பனார் உன்சொல் கேட்பேன் எனல்**

கலிப்பா

பண்ணீலி யானகொடும் பாவியெனை ஆட்டிவைத்தாள்
விண்ணானக் காரியும் மென்மருந்தால் உனைமறந்தேன்

---

முன்பக்கத் தொடர்ச்சி . . .

(தீச்சட்டி), கிடாய் வெட்டுதல், மாவிளக்கு எடுத்தல், மஞ்சள் நீராடுதல், நேர்த்திக்கடன் என்று பல்வேறு நிலைகளில் வளர்ச்சி பெற்ற நிலையில் அம்மக்களின் சமூகப் பண்பாட்டு வளர்ச்சியை ஆய்வு செய்யும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது. மேலும் அம்மக்களிடம் வழக்கில் உள்ள வழிபாட்டு மரபுகளை ஆய்வு செய்யும் நோக்கிலும் இவ்வாய்வு முறை அமைகிறது எனலாம்.

**பார்வை நூல்கள்**

1. சு. சண்முக சுந்தரம் & டாக்டர் சிலப்பு நா. செல்வராசு, **புதுவை நாட்டுப் புறவியல்**, பக்கம் - 123, 1998.

2. டாக்டர் மு. முத்தையா, **மதுரை மாவட்ட பள்ளர் மக்கட் பெயர்கள்**, நவம்பர் 1994, பக்கம் - 15, 16.

3. மாரிமுத்து, வயது 38, பள்ளபாளையம், தேவந்திர குல வேளாளர்

4. மேலது, வயது 38, பள்ளபாளையம், தேவந்திர குல வேளாளர்

5. டாக்டர் அ. விசுவநாதன், **சமுதாயச் சிந்தனைகள்**, டிசம்பர் 1996.

6. கருப்புசாமி, வயது 65, பள்ளபாளையம், தேவேந்திர குல வேளாளர்

7. மேலது, வயது 65, பள்ளபாளையம், தேவந்திர குல வேளாளர்

8. கோபிநாதன், வயது 27, பள்ளபாளையம், தேவேந்திர குல வேளாளர்

9. குப்புசாமி, வயது 40, பள்ளபாளையம், தேவேந்திர குல வேளாளர்

**மள்ளர் மலர் குறிப்பு :** 2001 - இல் எழுதப் பெற்ற ஆய்வுக் கட்டுரை.

❁ ❁ ❁

கண்ணானை உன்சொல் கடக்கேன் பெருமைசெய்வேன்
புண்ணியம்பார் செங்கோட்டுப் பூவையெனும் பெண்ணரசே 659

**சிவகாமி மள்ளத்தியார்**

சிந்து

ஆயம றைப்பொருள் அண்ணல்தன் பண்ணையில் பள்ளா - உன்னை
அந்தரங் கத்தில்அ டக்கிவைத் தாள்வந்து சொல்வாள்
மாய்மாலங் கற்ற மடந்தைதென் சீரங்க வல்லி -- இட்ட
மாயம ருந்தின்ம யக்கந்தெ ளிந்ததோ கள்ளா
வாய்கொள்ளா தேசியும் மந்தையில் வைத்தெனைத் தூற்றிப் – படி
மாறிச்சி றுக்கிதன் வார்த்தைகேட் டென்னைய டித்து -- நீயும்
தாய்வீட்டுக் கேகென்று தானுந்து றத்திவிட்டாயே -- இப்பத்
தானுஞ்ச பைமெய்க்கத் தக்கது பேசுறாய் பள்ளா 660

**சதாசிவக் குடும்பனார்**

தணிவு

பள்ளி:-

புண்ணைக்கி ளறுவார் போலே
மனம்புண்செய் யாதே -- முன்னே
போனதெல் லாமெடுத் தூனாவர்க்
கங்கள்சொல் லாதே – அடி
எண்ணாதும் எண்ணியே ஏங்கித்
தவிக்கிறேன் பள்ளி -- என்னை
எப்படி யாகிலும் ஈடேறச் செய்யடி
பள்ளி -- கடைக்
கண்ணாலே பார்த்துக் கடைத் தேறச்
செய்யடி பள்ளி -- அந்தக்
காய்க்கத் தொண்டித னையினி
மூதலி யாதே
விண்ணானம் பேசிட வேளையி
தல்லடிக் கண்ணே -- மெத்த
வேண்டிக்கொண் டேன்எனை மீட்டுக்கொண்
டாளடி பெண்ணே 661

**மூத்த மனைவி சிவகாமி மள்ளத்தியார் வைப்பாட்டி குட்டையை வெட்டி விடுவாள் எனல்**

முடுகு

பள்ளா:-

இந்தவ ணக்கமி ரக்கமுன் னாலெங்கே போச்சு -- உந்தன்
எத்துமுன் காயக்க வித்தையும் நானறி யேனோ -- மெள்ள
தந்திரம் பேசிப்ப சப்பியே ஏய்க்கிறாய் பள்ளா -- மெத்தச்
சர்ப்பனை நானறி வேனுன்னை நம்பலா காது
மந்திரங் கற்றபொ டிமாயக் கள்ளனீ யன்றோ -- உந்தன்
மார்க்கமும் நான்சற் றறிந்திருப் பேன் மாயக் கள்ளா
சொந்தமாய் வந்தவள் உந்தனுக் கேற்ற வைப் பாட்டி -- காலில்
தொட்டிடுங் கட்டையை வெட்டிவி டுவிப்பாள் பள்ளா 662

**குற்றம் பார்க்காதே எனச்சதாசிவக் குடும்பனார் வேண்டுதல்**

தணிவு

ஐயோ:-

குற்றம்பா ராட்டாதே கோரணி செய்யாதே பள்ளி -- உந்தன்
கோபத்தைப் பாராதென் ஆபத்தைப் பாரடி பள்ளி
சித்தமி ரங்குமென் சிந்தைக லங்குது பள்ளி -- இனிச்
செய்யுமு பகாரம் தன்னைமற ப்பேனோ பள்ளி
மெத்தவ லிக்குது கால்களும்; தூக்கமு மில்லை -- இந்த
வேதனை கண்டுமென்மீதில்த யவது மில்லை --
உற்றது ணையுனை யல்லாமல் வேறில்லை தேனே -- நானும்
உன்னையல் லால்மறு மின்னாரைச் சேரேண்டி மானே 663

**வாழும் வயதில் வஞ்சனை செய்தாயே எனல்**
**சிவகாமி மள்ளத்தியார்**

முடுகு

பள்ளா

வாழும்பி ராயத்தில் வஞ்சனை
செய்தாயே சொல்லாய் -- சொன்ன
வார்த்தைக்குள் ளாய்உனக் காகநான்
பட்டபா டெல்லாம்
பாழுக்கு றைத்தநிலாவது
போலவு மாச்சே -- இனிப்
பட்டும்ப லனென்ன கெட்டுமுட்
டைச்சாம்ப லாச்சே -- நிதி
ஆளுக்கும் பாழுக்கும் வீணாக
வேகரைத் தாச்சே -- எச
லாட்டத்தி னால்நம்ம வீட்டுப்பி
ழைப்பதும் போச்சே
வேளைகள் கண்டுசங் காத்தம
தாகுமுன் நேசம் -- இந்த
வேடிக்கைப் பேச்சினில் ஆவதுண்
டோசொல்லுங் கணவா 664

**சதாசிவக் குடும்பனார் போனது போகட்டும் இனிமேல் சுகமாய் இருப்போம் எனல்**

தணிவு

பள்ளி:-

போனது போகட்டும் நீயும் நானுஞ்சுக மாகப் -- பரி
பூரணர் தம்மரு ளாலிருந் தால்இனி நாமும்
வேணது தேடலாம் விட்டுவி டாய்பிடி வாதம் -- உனை
மேன்மைய தாகவும் வைத்துந டத்துவேன் மாதே
தானிது சொல்தவ றாதடி ஆண்டவர் சாட்சி -- இது
சத்தியம் சத்தியம் பொய்யென்றி ராதேநன் மானே
ஊனுறக் கங்களு மில்லை மனத்துய ராலே -- மெத்த
உள்ளங்க லங்கினேன் கள்ளங்க ளில்லையென் மாதே 665

**சிவகாமி மள்ளத்தியார் சிவன் செயல் எனல்**

தணிவு

பள்ளா:-

பஞ்சணை மீதில்தி னமும்ப டுத்தச ரீரம் -- இந்தப்
பாழும்பு ழுதி தனிலும்ப டுக்கவும் ஆச்சே -- ஐயோ
நெஞ்சங்க லங்கிநீர் நேசம்வே றாகினீர் கணவா -- என்ன
நிந்தனை இன்னம்வி ளையஇ ருக்குதோ கணவா
அஞ்சலென் பாரிலை ஆண்டவர்க் கார்உரைப் பார்கள் - நாம்
ஆரைப்ப ழித்திட்ட தோஷமை யோஅறி யோமே - நாமள்
சஞ்சலப் பட்டதி னாலென்ன நம்மாலொன் றில்லை - சிவன்
தன்செய லேதோஅ றிகிலேன் நான்என் கணவா 666

செங்கோட்டுப் பள்ளு

### சதாசிவக் குடும்பனார்

தணிவு

வஸ்துக்குஞ் சுத்துக்குஞ் சோற்றுக்கும் ஏக்கற்றுப் போனேன் – நீ
மனதுவை யாவிட்டால் வைத்திருக் கேனுயிர் நானே – மெத்தப்
பற்றவைத் தாய்முன்பு பற்றுவைத் திப்பொழு தேநீ – முகம்
பார்த்தெனைக் கார்த்திடுங் கிர்த்தியு னக்குண்டு மானே
மெத்த இனிச் சொல்லவேண்டிய தில்லையென் தங்கமே – பிராணன்
விட்டிடு வேனானும் வேண்டுமென்றாலிப்போ மங்கையே
கர்த்தன் பண்ணையக் காரர்க்குச் சொல்லியென் அன்னமே – எந்தன்
காவலை நீக்கியென் கால்குட்டை வாங்கடி சொர்னமே 667

### சிவகாமி மள்ளத்தியார் மனமகிழ்ச்சியடைதல்

தணிவு

கணவா

வஞ்சனை யில்லைம னதுகந் தேன்பிராண நாதா – அந்த
மாய்மாலக் கள்ளியால் வந்தபொல் லாப்பிது கணவா
வெஞ்சின மானதை விட்டுவிட் டேன்சிந்தை வேண்டாம் – இனி
மேல்விதன ங்களை விட்டிடுங் கண்கலங் காதே
துஞ்சமென் றேபண்ணைக் காரர்தன் காலினில் விழுந்தே – குட்டை
தன்னையிப் போதுத ரிப்பித் திளைத்தச ரீரம்
அஞ்சாறு நாளையில் தேற்றிவி டுகிறேன் கணவா – ஒன்றும்
ஆலோ சிக்காதேநீ அஞ்சாதே யென்னுட கணவா 668

### சிவகாமி மள்ளத்தியார் பண்ணைக்காரனைக் கேட்டு சிறை விடுக்கிறேன் எனல்

அறுசீர் விருத்தம்

அஞ்சவே வேண்டாம் பண்ணை
ஆண்டவர் பால்நான் சென்று
வன்சிறை யதனை நீக்க
மனுவது வாங்கி வாறேன்
சஞ்சலம் அகற்றிச் சாதம்
சாப்பிடும் என்றே வஞ்சி
பஞ்சரித் திடவே உண்டு
பள்ளனுங் கூறினானே 669

அறுசீர் விருத்தம்

என்னுட பிராண வல்லி
எப்படி யாகி லுந்தான்
மன்னவர்க் குரைத்து என்னை
வருகஎன் றழைத்துக் கொள்ளும்
என்னவே மெல்லி நல்ல
தென்றவள் தான்நடந்து
பன்னகா சலமே ரையர்
பதம்பணிந் திறைஞ்சி வந்தாள் 670

### சிவகாமி மள்ளத்தியார் அரவகிரி ஆண்டவர் உமையொருபாகனை வேண்டல்

சிந்து

அரகர சிவசிவ சாம்பச தாசிவா
அரவபூ ஷணமகா தேவா
வரநதி மதியணி வேணிய னேயிடப
வாகனா ரூடவி லாசா
பரமசுந் தரிசிவ காமித னையும் வாம
பாகந்த னிலேவைத்த நாதா
சுரர்மக வானயன் மால்முனி வர்தினம்
துதிபெறும் நாககிரி வாசா 671

உனது மகிமையெவர் அறிவார்ள னைப்பயின்று
உனதுஅ டிமைக்கடி யாளைத்
தனது மனைவிசெய்து பின்னும வருக்கொரு
தாரம்வி வாகமது செய்து
மனதுகு ரோதமது வளர்த்தும னம்வேறாக்கி
மாய்கையுண் டாக்கிப்பகை யாக்கி
இனம்பிரிந் திடுங்கலை போலுமெ னைப்பிரித்து
இளையவ ளைவாழ்கச் செய்து 672

இந்தப்பு துமைகளும் போதாம லேஎனையும்
எடுத்துவிட் டேகூத்துப் பார்க்கச்
சந்த்ரசே கரநயி னாருடன் சாடிசொல்லத்
தான்செய்த வர்க்குக்கோபந் தந்து
அந்தச்ச ணம்அடிமை தனையுங்குட் டையில்போட
அப்ணைதந் தப்படிச் செய்து
சிந்தைமெ லிந்துமூவர் திக்காலொ ருவர்நொந்து
சிவனேஎன் றுமைநோக வைத்து 673

அப்பனே இதுவெல்லாம் உமக்கொரு திருவிளை
யாடலென் றோவேடிக்கை பார்த்தீர்
இப்படி யெளியரைச் சோதனை செய்யில் நாங்கள்
ஏதறிந் துநிர்வாகஞ் செய்வோம்
கற்பனை செய்துலகம் மூன்றினி லுமனேக
காரணங் கண்டநீல கண்டா
உற்பனம்வினை ரெண்டும் வருவதுன் செயலன்றி
ஒருவரால் வந்தணுகி டாது 674

பேதையென் றேஅறிந்தும் அடிமையென் றெண்ணிடாமல்
பிரியவைத் தேன்விகடஞ் செய்தீர்
போதுமிந் தஅவதி இனிநிர்வா கஞ்செய்யப்
போகாதுன் சித்தமிரங் கையா
வாதைக்கி டஞ்செய்தின்னந் திருக்கூத்தெங் களையாட்டி
வைக்காதே சித்தமிர ங்கையா
நீதிமி குமகினர் தமக்கடி யாளுஞ்செய்த
நிந்தைநீர் பொறுத்தாள வேணும் 675

படியில்என் மேல்பழிகள் போட்டென்ம கினனையும்
பருங்குட்டை யிலேபோட்டு விட்டீர்
அடியவன் படுந்துயர் பார்க்கமு டியிலையென்
அங்கம்ப தறுதேஎன் சாமி
அடியவர் திரனிலி தேதோபா ராமுகமாய்
அசங்கிதஞ் செய்திடாமல் ஸ்வாமி
துடிமிகும் பண்ணையினார் மனதிருந் தென்கணவன்
தொழுவைத் தரித்துவிடும் ஸ்வாமி 676

### 49. சிவகாமி மள்ளத்தியார் பண்ணையாரைக் கேட்டல்

அறுசீர் விருத்தம்

இப்படிச் சிவனைத் தியானித் திறைஞ்சியே துதித்து நல்ல
மைப்பெறு மிடற்றார் பண்ணை மன்னவர் அருகில் வந்து
அப்பனே சரணம் உங்கள் அடியவள் ஒருவிண் ணப்பம்
செப்புவேன் மனது கந்தென் செய்கையும் முடிப்பீர் என்றாள் 677

சிந்து

தேவரீர் சீர்பாதந் தெண்டனிட்டேன்
பண்ணை யாண்டே -- உங்கள்
சித்தமி ரங்கியென் குற்றம்பொ
றுத்திடும் ஆண்டே
ஏவல டிமைதன் மீதுத
யவுவை யாண்டே -- இந்த
ஏழைக்கு கந்துயிவ் வேளைக்கு
தவும்என் னாண்டே 678

**பேய் மதியால் பொய் சொன்னேன் எனல்**

பெண்புத்தி பேய்மதி யென்பதெல்
லாமெய்யென்னாண்டே – நானும்
பின்வருங் காரிய மெண்ணாமல்
தூறினே னாண்டே
தண்மைக்கு ணமுந்த யவுமி
கும்பண்ணை யாண்டே -- எந்தன்
தாயுந்த கப்பனும் நீயல்ல
வோபண்ணை யாண்டே 679

பள்ளனும் நாங்களும் பிள்ளைக
ளல்லவோ ஆண்டே – நானும்
பரியாச மாய்மதி யறியாம
லேசொன்னேன் ஆண்டே
கொள்ளிகொண் டென்தலை யைச்சொரிந்
துகொண்ட னாண்டே - எல்லாம்
கொண்டுபொ றுத்துஉன் தொண்டரை
ஆளுமென் னாண்டே 680

அழுதுகி டக்கிறான் பள்ளன்தொ
ழுவினி லாண்டே -- கண்டு
அங்கமு ருகியென் னாவிப
தறுதே ஆண்டே
தொழுதுங்கள் பாதத்தில் வந்துவிழுந்தேனென்
னாண்டே -- என்
துக்கத்தை யாருடன் சொல்லிநான்
ஆறுவேன் ஆண்டே 681

தூறாகப் பொய்சொன்னேன் தொண்டிமேல்
குற்றமல்லாமல் – உங்கள்
தொண்டன்மே லேஒரு தோஷமு
மில்லையென் னாண்டே
சாராயங் கள்ளுக்கு டித்தவெ
றியாலே ஆண்டே -- வாய்த்
தப்பித மாகவே தாறுமா
றாய்ச்சொன்னேன் ஆண்டே 682

தில்லுமல் லல்லாம லுள்ளபடியல்ல
ஆண்டே -- உங்கள்
சித்தமென் பாக்கியஞ் செய்ததெல்
லாம்பொறும் ஆண்டே
சொல்லுக்க டங்கா இளையவ
ளால்வினை மீண்டு – வெறுந்
தொல்லக முமிந்தப் பொல்லாப்பும்
வந்ததென் னாண்டே 683

மல்லாந்து மிழ்ந்தால்மார் மேல்விழு
மென்றறி யாமல் -- பள்ள
மட்டிப்புத் தியால்தேள் கொட்டாதென்
றெண்ணினே னாண்டே
கல்லார்ந்து கரடிகை வேல்வாங்கி
னகதை யாண்டே -- சிகைக்
கதலியுங் காற்றில
டிபட்டுவாரதென் னாண்டே 684

தன்விளக் கென்றுநான் முத்தமிட்
டேன்பண்ணை யாண்டே – அது
தான்சுடு மென்றத கமைய
றிகிலே னாண்டே
என்பிழைப் புக்குயி டங்கேடு
வந்ததென் ஆண்டே -- இப்போ
ஏசுவார் பேசுவார்க் கெல்லாந்த
லைசாய்ந்தேன் ஆண்டே 685

கொண்டவன் தன்மனம் நோகத்துரோ
கஞ்செய்தே னாண்டே – இந்தக்
கொடுமையுந் தோஷம்உம் மால்தீர
வேணுங்கா னாண்டே
பண்டொரு நாளினு மெத்தவ
ருத்தங்க ளறியான் -- பள்ளன்
படுகிற அவதிநான் பார்க்கமு
டியாது ஆண்டே 686

ஏங்கிமெ லிந்துயி ளைத்துத்து
ரும்பானா னாண்டே -- கஞ்சி
இத்தனை யாகிலுஞ் சற்றுமி
றங்கிலை யாண்டே
தீங்குவ ருமென்ற றியாமல்
போனேனா னாண்டே -- பாவி
சீரங்கத் தாளெங்க ளுக்குச்ச
னியானா ளாண்டே 687

**மள்ளர் இல்லாமல் பயிரிடுவார் யார் எனல்**

சாடிமெய் யென்றின்னங் கோபம்பா
ராட்டாதென் னாண்டே – மார்
சரிந்தால்வ யிறல்லோ தாங்கவே
ணும்பண்ணை யாண்டே
ஆடிபி றந்துகா லாவதி நாளாச்சு
தாண்டே -- **பள்ளன்**
**அல்லாம லேபயி ராரிடு**
**வார்பண்ணை யாண்டே?** 688

பட்டுப்ப டாதசொல் பாரத
மாக்கினேன் ஆண்டே -- தீரப்
பத்துப்பத் தாகவி சாரித்துப்
பாருமென் னாண்டே
சிட்டுக்கு ருவிமேல் பாணந்தொ
டுப்பாரோ ஆண்டே -- மறு
திக்காரு மையல்லால் வேறேகெ
தியுண்டோ ஆண்டே 689

கொம்பணை யேரிகு ளந்தண்ணீர்
வந்ததென் னாண்டே -- ஏரிக்

கோடிக்க லிங்கில்நீ ரோடிமேல்
போகுதென் னாண்டே
சம்பாநெல் போகத்துப் பட்டமிதுநல்ல
தாண்டே -- பெற்ற
தன்பிள்ளை தன்குற்றந்
தான்பொறுக்க வேணுமாண்டே 690

கள்ளனைப் போலேக லங்கித்த
விக்கிறா னாண்டே -- அவன்
கால்மரம் வெட்டிவ
ரவழையும்பண்ணை யாண்டே
உள்ளப டியேநான் சொல்லியே
வைக்குறே னாண்டே -- பள்ளன்
ஓடியே போனாலும் நானும்பி
ணையல்லோ ஆண்டே 691

கும்பிட்ட கையோடே வாழ்த்திவிட்
டாற்போலே ஆண்டே -- பள்ளன்
குட்டைம ரம்வெட்டி
விட்டுவிடவேணும் ஆண்டே
அன்பென யாருடன் சொல்லிவி
டுவிக்கப் போறேன் -- பள்ளன்
அறிந்தறி யாமல்செய் குற்றம்பொ
றுத்திடு மாண்டே 692

**மள்ளர் குலத்துப் புத்திகள்**

**மள்ளர்கு** லத்துக்குப் புத்திகள்
வந்தது ஆண்டே -- உங்கள்
மனதறிந் துநாங்கள் நடக்கமு
டியுமோ ஆண்டே
கள்ளிதன் சொல்படி யோ என்றெண்
ணாதேஎன் னாண்டே -- உன்
கடாட்சத்தி னாலேக டைத்தேற
வேணுங்கா ணாண்டே 694

**சிவகாமி மள்ளத்தியாரின் விண்ணப்பம்**

அகவல்

மெய்யருக்குரிய வித்தகன் செங்கோட்
டையனார் பண்ணை யாண்டவா சரணம்
குசலமுங் கபடுங் கொடுமைசற் றறியா
பசுபதி யெனப்பேர் படைத்துநான் உலகில்
நல்லவ ளெனவே நடந்திடும் அடிமை
சொல்லும்வி ண்ணப்பம் சுவாமியே கேளும் 694

**வம்பறியாத கணவர் எனல்**

வம்பறி யாத மகிணருக் கிளைய
கொம்பனை வந்தே குடிலமுண் டாக்கி
எனக்கவ னுக்கும் ஏதில செய்து
மனக்கவ டங்கள் வளர்த்தினாள் கள்ளி
வம்பிதன் மருந்தால் மயங்கியே தலைநாள்
நம்பினாள் தனையும் நழுகவே விட்டான் 695

விட்டுமே யிளையாள் வீட்டதே கெதியாய்
இட்டமாய்க் கணவர் இருந்ததி னாலே
சினம்பெருத் தேநான் சேயிழை மதியால்
மனம்பொறுக் காமல் வந்துதான் உமது
காலிலேவிழுந்து கணவன் மேல்தூறு
கோலின தல்லால் கொடுமையொன் றில்லை 696

பெருமையொன் றில்லாப் பேரிளம் பெண்ணாம்
பருவமே படைத்த பாரியென் றாலும்
கொழுநனார் பின்னோர் குடிமக ளுடனே
தழுவினால் மனது சகித்திடு வாரோ
அக்கிர வண்டிபோல் அல்லநான் மடந்தை
பக்குவந் தனிலே பரதவிப் பேனோ 697

குஞ்சரந் தனக்குக் கோவணங் கொடுத்தால்
அஞ்சுமோ அதுபோல் அரிவைமார் கணவன்
தனையடக் கிடவுந் தான்முடிந் திடுமோ
நினைவெனக் கிலையோ நேரிளை யாளோ
அப்படிக் குத்தான் ஆண்பிளை மறுபெண்
செப்பமென் றவளைச் சேர்ந்தபோ தைக்கும் 698

ஆதியில் வந்த அரிவைதன் மனது
வேதனைப் படுகா விதமது செய்து
தப்பற மறுபெண் தன்னுடன் கூடி
எப்படி யிருந்தா லும்பிச கில்லை
அவ்வழி யிலையே அறுதியாய் எனையும்
கவ்வும்நாய் போலே கடக்கவைத் தாரே 699

அதுவுஞ் சகித்து ஆண்டவர் செயலா
மிதுவும்என் றடிமை மெலிந்து 'நா யகர்க்கு
வருபுது மோக மல்லவோ மகிணர்
இருதய மறிந்த ஏந்திழை யாளைப்
பரதவித் தலையப் பண்ணிடார் இதுவும்
வரவரக் காண்போம்' எனமன தொறுத்து 700

இத்தனை நாளும் இருந்தனன் அவர்க்குச்
சித்தமே இறங்காச் செய்கையி னாலே
வந்தது வரட்டும் மகிணருக் காக
நிந்தையே சொல்லி நீலியென் றுலகோர்
ஏசினு மேசட் டென்றுமென் மனது
கூசிடா மலும்நின் கொலுவினில் வந்து 701

**பழுது, கபடு, களவு அறியாத மள்ளர்மேல்
பொய்யாகப் பழி சொன்னேன் எனல்**

களவு எள்ளளவும் கபடுவஞ் சனையும்
பழுதுசற் றறியாப் பள்ளன்மேல் நானும்
பொய்யெனும் சொல்லைப் பொருத்தியே களவு
மெய்யெனச் சாடி விளம்பினே னாண்டே
கோபமாய் உரைத்த கொள்கையல் லாமல்
பாபமொன் றறியான் பள்ளனும் ஐயா 702

தேவரீர்க் கதுவுந் தெரிந்துமே யிருக்கும்
ஆவலாய் என்சொல் அவத்தம்வ ராமல்
பேதையாள் பெற்ற பிள்ளைநேர் இவளும்
வாதையே படுறாள் மகிணனோடிவளை
சேர்த்துநல் லுறவு செய்திட வேண்டிப்
பார்த்துமே அவனைப் பயமுறுத்தி யும்பின் 703


தொழுவினில் போட்டுத் தொண்டனைக் கண்டித்( து)
அழும்படி செய்திர் ஐயனே நானும்

செங்கோட்டுப் பள்ளு

புது ஆய்வு நூல்

## மருதநிலத்து மள்ளர் இசை

| | | |
|---|---|---|
| நூல் | : | மருதநிலத்து மள்ளர் இசை (பள்ளிசை) |
| ஆசிரியர் | : | டாக்டர் கு. மாரியப்பன்,<br>கோட்டப் பொறியாளர், BSNL,<br>12, குருசாமி நகர்,<br>பாரதியார் பல்கலைக்கழகம் (அஞ்சல்),<br>கோயம்புத்தூர் - 641 046. |
| அளவு | : | டெமி அளவு, 314 பக்கங்கள் |
| விலை | : | ரூ.150, டிசம்பர் 2005 |
| வெளியீடு | : | திசம்பர் 2005, மாமன்னர் அச்சகம்,<br>10/2 A, நால்வர் நகர்,<br>பாரதியார் பல்கலைக்கழகம் (அஞ்சல்),<br>கோயம்புத்தூர் - 641 046. |




இந்நூல் எட்டு அத்தியாயங்களையும் பின்னிணைப்பையும் கொண்டுள்ளது. 1.பள்ளிசை - அறிமுகம், 2. பள்ளிசையின் தோற்றம், 3. பள்ளிசையின் அமைப்பு, 4. பள்ளிசையின் பாடுபொருள், 5. பள்ளிசையின் வளர்ச்சி, 6. பள்ளிசை காட்டும் மள்ளர் மாண்புகள், 7. பள்ளிசை புலப்படுத்தும் ஆய்வு முடிவுகள், 8. பின்னிணைப்பு எட்டுப் பகுதிகளாக உள்ளது. முப்பத்து இரண்டு பள்ளு நூல்கள் ஆராயப்பட்டுள்ளன. மிக முக்கியமானது. சொல்லப்போனால் சமூக உள்ளடக்கத்தினாலேயே அந்த இலக்கியங்கள் பெருமை பெறுகின்றன. மள்ளர், குடும்பர் எனும் தேவேந்திர குல வேளாளர்களின் மாண்புகளை பல்வேறு தளங்களில் சிறப்பாக நூலாசிரியர் எடுத்துக் காட்டுகிறார், படிக்க வேண்டிய நூல். சமூகவியலார்கள் பழைய தவறான விளக்கங்களையும் கருத்துக்களைத் திருத்திக் கொள்வதற்கு இந்நூல் துணைபுரியும். இதனைப் படைத்த நூலாசிரியர் முனைவர் கு. மாரியப்பன் அவர்களுக்குப் பாராட்டுக்கள்.

### அணிந்துரை


- **முனைவர் இரா. சந்திரசேகரன்,**
முதன்மையர், கல்லூரிகள் மேம்பாட்டு
ஆய்வாயம் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்,
பாரதியார் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 046.


தமிழ்ச் சிற்றிலக்கிய மரபில் எழுந்த பள்ளு நூல்களைப் பற்றி அறிஞர் மாரியப்பன் புதிய நோக்கில், புதிய அணுகுமுறையில், புதிய முடிவுகளைக் கண்டறிந்து எழுதியுள்ள இந்த நூல் இலக்கியங்கள் மறுவாசிப்பு செய்யப்பட வேண்டிய தேவையை உணர்த்தும் வகையில் வெளிவந்துள்ளது. ஆசிரியர் திரு. மாரியப்பன், மிக அரிதின்முயன்று 30 பள்ளு நூல்களைத் தேடிக் கண்டறிந்து அவற்றின் அடிப்படையில் இந்த ஆய்வு நூலைப் படைத்திருக்கிறார். தமிழிலக்கிய வரலாற்றில் இலக்கிய வகைமைகளும், பாடுபொருள்களும், பாடுமுறைமைகளும் காலந்தோறும் மாறிமாறி நிகழ்ந்து கொண்டிருந்திருக்கின்றன. ஆட்சியாளர்களின் அமைப்பும், அவர்தம் கருத்தியலும் இத்தகைய மாற்றங்களுக்கு ஓரளவு பின்புல ஆற்றலாக இருந்தாலும், மக்களின் உயிர்க் குரல் தன்னை எல்லா இலக்கிய வகைகளினூடும் நிலைநிறுத்திக் கொண்டே வந்துள்ளது. வேளாண் மக்களாகிய மள்ளர்களின் உயிர்க்குரலை பள்ளு நூல்களின் வழியே மீட்டெடுக்க முயன்றுள்ளார் அறிஞர் மாரியப்பன்.

பள்ளிசை என்பது மண்ணின் நாட்டு வளத்தையும் போர்ச் சிறப்பையும், உழவர் சிறப்பையும் உழவர்களின் ஏர் மற்றும் போர்ப் பெருமையையும் இசைத்துப் பாடப்படுவதாகும் என்று விளக்கம் தந்து பெரும்பாலான பள்ளு நூல்களில், பள்ளு நூல்களைப் படைத்து படைப்பாசிரியர்கள், காப்பு மற்றும் கடவுள் வணக்கத்தில் பள்ளிசை என்றே குறிப்பிட்டிருப்பதை எடுத்துக்காட்டி, ஆனால் பதிப்பாசிரியர்கள் ஏன் இதை மறந்தார்கள் என்று தெரியவில்லை என்று சுட்டிக்காட்டுகிறார். சங்ககால இலக்கியங்களில் மள்ளர், மள்ளியர் எனக் குறிப்பிடப்பட்ட வேளாண் மக்கள், பிற்காலத்தில் தோன்றிய பள்ளிசை நூற்களில் பள்ளர்,

*முன்பக்கத் தொடர்ச்சி . . .*

உங்கள்அப் பணைமேல் உண்ணவே சோற்கொண் (டு)
அங்கணே மகிணண் அண்டையில் போனேன்
கண்டுமே அவனுங் கலங்கியே விதனங்
கொண்டுமே எல்லாக் கொடுமையுந் தீர்ந்து 704

மெத்தவும் எனையே வேண்டியே "எனது
குற்றமும் பொறுத்தென் கொடுமையுஞ் சகித்தாள்
வகையறி யாமல் வண்டியைக் கொண்டேன்
பகையெனக் குனக்கும் பாவியே செய்தாள்
அப்பவுந் தெரியா தகந்தையே செய்தேன்
செப்பமா யிப்பத் தெரியுதெந் தனக்கு 705

உன்னைவே றன்றி உறதியொன் றில்லை
பின்னுமா தர்கள்பால் பேசிடேன் எதுவும்
சத்யமா யெண்ணும் தையலே உனது
சித்தமே மகிழ்ந்தென் சிந்தையைத் திரும்
வன்மமே யின்னம் வைத்திட வேண்டாம்
தன்மமே பாராய் தானுமிச் சணமே 706

தொடரும் . . .

பள்ளியராகக் குறிப்பிடப்படுகின்றனர் என்ற கருத்தாக்கத்தின் அடிப்படையில், மருத நிலத்து மள்ளர் - மள்ளியரின் வாழ்வியலை இசைத்துப் பாடும் பாட்டு பள்ளிசையாக அமைந்தது என்ற கருத்தை விளக்குகிறார் ஆசிரியர்.

உழத்திப்பாட்டு, ஏர்மங்கலம், முகவைப்பாட்டு, அழகுடைய பள்ளி, ஆடும்படி பள்ளி என்ற வழக்காறுகள் பள்ளிசை இலக்கியமாய் தோன்றுவதற்கு வழிவகுத்ததையும், உழவுத் தொழில் மக்களான மள்ளர் மள்ளியரின் வாழ்வையொட்டிய கூத்து வகைகள் பாட்டும் தாளமும் பொருந்த மக்களால் வளர்க்கப்பட்ட நிலையில் பிற்காலச் சிற்றிலக்கியப் புலவர்கள், அவ்வக்கால ஆட்சியாளர்களின் மனநிலைக்கு ஏற்ப மாற்றங்கள் தந்து பள்ளுப்பாட்டு, பள்ளேசல் போன்ற பெயர்களில் படைத்தனர் என்னும் கருத்தை ஆசிரியர்.

பள்ளிசை நூல்களின் அமைப்பில் 48 உறுப்புகள் அமைந்திருப்பதையும், ஒரு சில நூற்களில் 52 உறுப்புகள் வரை விரிவுபடுத்தப்பட்டிருப்பதையும் விளக்கி, சிறப்பு உறுப்புகளாக தோணி சிந்து, கிளைவளம் கூறுதல், குலமுறை கிளத்தல், தாலாட்டு, முளைப்பாரி ஆகியன எவ்வாறு பள்ளிசையில் கையாளப்படுகின்றன என்பதையும் ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ளது, பாராட்டுதற்குரியது ஆகும். பள்ளிசையின் பாடுபொருள் மற்றும் பள்ளிசையின் வளர்ச்சி பற்றி ஆசிரியர் எழுதியுள்ள விளக்கம், பள்ளிசைப் பாடல்களில் அவருக்குள்ள பரந்த புலமையை அடையாளம் காட்டுகிறது.

எல்லா இலக்கிய வகைகளிலும், அவற்றில் புதைந்துள்ள சமூக உள்ளடக்கம் மிக முக்கியமானது. சொல்லப் போனால், சமூக உள்ளடக்கத்தினாலேயே அந்த இலக்கியங்கள் பெருமை பெறுகின்றன. பள்ளிசை இலக்கியங்களில் மள்ளர் மாண்புகள் எவ்வாறு காட்டப்படுகின்றன என்பதை ஆசிரியர் மிக விளக்கமாக எடுத்துக் காட்டுகிறார். சமூக வரலாற்றில் ஆதிக்க மரபுகளும் அடக்குமுறை அமைப்புகளும் காலந்தோறும் மாறி மாறி அமைகிற சூழல்களில், அடக்குமுறைக்குட்படுத்தப்பட்ட சமூகத்தின் குரல் இலக்கியங்களில் நேர்மையாகவும் உண்மையாகவும் பதிவு செய்யப்பட முடியாமல் போகும் வாய்ப்புளது. என்றாலும் கூட அந்தக் குரலின் பதிவு இலக்கியத்தில் உட்பிரதியாக வெளிப்பட்டுத் தன்னை நிலைநாட்டிக் கொள்ளும். மேலோட்டமாக, பள்ளு இலக்கியங்களில் உழவர்மக்களைப் பற்றிய எள்ளல் சொற்கள் காணப்பட்டாலும், உட்பிரதியாக, மள்ளர்களின் வாழ்வியல் பெருமைக் கூறுகள் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை ஆசிரியர் மிக அரிதின் முயன்று வெளிப்படுத்தியுள்ளார்.

பள்ளு இலக்கியங்களுக்கான ஆய்வுக் களத்தில் மட்டுமல்ல, தமிழியல் ஆய்வுக்களத்தில் இது குறிப்பிடத்தக்க ஒரு நூல் ஆகும். பழைய இலக்கியங்களை, ஏற்கனவே கற்பிக்கப்பட்டுள்ள வாசிப்பு பிரதிகளிலிருந்து, மாற்று வாசிப்பு செய்வதற்கான தேவை எழுந்திருப்பதை இந்நூல் உறுதிப்படுத்துகிறது. இலக்கியங்களைப் புறந்தள்ளுவது, மறுப்பது என்கிற நிலைப்பாட்டிற்குள் செல்லாமல், மறுவாசிப்பு செய்வதன் மூலம் வேறு குரல்களையும், வேறு செய்கைக் குறிப்புகளையும் அடையாளம் காண முடியும் என்பதை இந்நூல் உணர்த்துகிறது. சமூகங்களின் வரலாறு அரசோடும் அரசாட்சி மரபுகளுடனும் பிணைக்கப்பட்டிருந்தாலும், சமூகத்தின் உட்குரல் பிணிக்கப்பட முடியாதாகையால், அது எப்போதும் தன்னைப் பதிவு செய்து கொண்டேயுள்ளது. வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ, உட்கிடையாகவோ, ஏதாவது ஒரு வகையில். இலக்கியம் அதற்கான ஒரு சரியான களம். ஒவ்வொரு காலமும், அதனதன் நோக்கில் இலக்கியத்தைக் கற்கிறது. இன்று மாறியிருக்கிற சிந்தனை மரபில் இன்றைய அறிவு மரபில் பள்ளு நூல்கள் படிக்கப்பட வேண்டும் என்பதை ஆசிரியர் நினைவுபடுத்தியுள்ளார். எதிர்காலம் வேறுநோக்கில், வேறு பார்வையில், பள்ளு நூல்களை மட்டுமல்ல, பள்ளிசை பற்றி ஆய்வையும், மறுவாசிப்பு செய்யக்கூடும்.

பொறியாளராக - பொறியியல் நிர்வாகியாகச் செயற்பணியில் இருந்தாலும், தம் உயிர்ப்பணியாகக் கொண்டு தமிழாய்வுக்குள் நுழைந்து, மள்ளர்களின் வாழ்வியலை ஆராய்ந்துள்ளார் அறிஞர் மாரியப்பன். தமிழிலக்கியத்திலும், தமிழாய்விலும் அவர் கொண்டிருக்கும் ஈடுபாடு பாராட்டத்தக்கது. தொடர்ந்து பல நூல்களை அவர் அளிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

இடம் : கோவை

தேதி : 22.12.2005

❁ ❁ ❁

Printed by Mrs. Thulasimani Mariappan and Published by Dr. Guruswami Siddhan on behalf of Devendra Kula Velalar Sangham and Printed at Maa Mannar Achakam, 10/2A, Nalvar Nagar, Coimbatore - 641 046 and published at 10/2, Nalvar Nagar, Coimbatore - 641 046. Editor : Dr. Guruswami Siddhan

செய்தித்தாளாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பாரதியார் பல்கலைக்கழக அஞ்சலகத்தில் ஒவ்வொரு மாதமும் 10 & 11 தேதிகளில் சேர்க்கப்படுகிறது.

அனுப்புநர் :

**பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தர்,**
**ஆசிரியர், மள்ளர் மலர், 10/2 நால்வர் நகர், பாரதியார் பல்கலைக் கழகம் அஞ்சல், கோயமுத்தூர் - 641 046.**

பெறுநர்:

உயர்திரு

. . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . .